வ்லை: 30.00
பக்கங்கள் : இருபது

Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 21 செவ்வாய்க்கிழமை (04.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 136

### கொரோனாத் தடுப்பூசி 1ஆம் கட்டம்
## மூன்று மாதங்களுக்கு மட்டுமே பாதுகாப்பானது

(கொழும்பு)
கோவிட் தடுப்பூசி ஏற்றும் முதலாம் கட்டம் மூலம் மூன்று மாதங்கள் செல்லும் வரை கொரோனா வைரஸ் தொற்றும் வேகம் குறைவாகும்.
அத்துடன் தடுப்பூசி ஏற்றிக் கொண்ட 19

## காரைநகர் கசூரினா கடற்கரை மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)
காரைநகர் கசூரினா கடற்கரை 19

### வீரர்களுக்கு கொரோனா
## IPL நேற்றைய போட்டி ஒத்திவைப்பு

(டில்லி)
கிரிக்கெட் வீரர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதையடுத்து நேற்று நடைபெறவிருந்த ஐ.பி.எல் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
ஐபிஎல் கிரிக்கெட் தொடர் விறுவிறுப்பான 19

## கர்ப்பிணிகள் 70 பேருக்கு கொரோனா தொற்று

05ஆம் பக்கம் பார்க்க

### அதிசயங்களால் கொரோனாவை கட்டுப்படுத்த முடியாது
# இறுக்கமான கட்டுப்பாட்டு நடவடிக்கை எடுங்கள்
### தாமதித்தால் நாட்டை முழுமையாக முடக்க நேரிடும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)
அதிசயங்களால் கொரோனா பரவலை கட்டுப்படுத்த முடியாது. இறுக்கமான கட்டுப்பாட்டு நடவடிக்கை மூலமே கொரோனாவைக் கட்டுப்படுத்தலாம். மேலும் தாமதித்தால் நாட்டை முழுமையாக முடக்க நேரிடும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
(19ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றங்கள் ஒரு வாரத்துக்கு பூட்டத் தீர்மானம்

(கொழும்பு)
கொரோனா தொற்று அதிகரித்துள்ளமையால், உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களை ஒரு 19

## எகிறும் புதுவருட கோவிட் கொத்தணி நேற்றும் 1923 தொற்றாளர்கள் பதிவு

(கொழும்பு)
இலங்கையில் மேலும் 1923 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
இவர்கள் அனைவரும் புதுவருட கொவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.
அதன்படி, நாளொன்றுக்கு பதிவான அதிகபட்ச கொரோனா நோயாளர்கள் நேற்றைய தினம் பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.
அதனடிப்படையில் இலங்கையில் இது வரையில் 113,628 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
(ம)

## 1906 கொரோனா தொற்றாளர்கள் தொடர்பில் அறிவிக்கலாம்



13ஆம் பக்கம் பார்க்க

## கொரோனாவுக்குள் அரசியல் வேண்டாம்
### தொற்றை கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழையுங்கள்
### பிரதமர் மகிந்த கோரிக்கை

12ஆம் பக்கம் பார்க்க

## வியாபாரிகள், ஆசிரியர், மருத்துவ ஊழியர் பல்கலை மாணவன், பிரதேச உறுப்பினர் உட்பட
### வடக்கில் 14 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்.பரிசோதனைக்கூட முடிவுகளின்படி நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் வைத்தியசாலை ஊழியர், பொலிஸ் உத்தியோகத்தர், ஆசிரியை, பிரதேச சபை உறுப்பினர், நுண்கடன் நிறுவன ஊழியர், யாழ்.பல்கலைக்கழக மாணவர் உள்ளடங்குவதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
மேலும் யாழ்.மாவட்டத்தில் 9 பேர் உட்பட வடக்கில் 14 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
யாழ்.மாவட்டத்தில் 19

## கொரோனா 13 பேர் பலி

(கொழும்பு)
இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான மேலும் 13 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
சுகாதாரத் திணைக் 19

## கிளிநொச்சியில் பொலிஸார் 4 பேருக்கு கொரோனா

08ஆம் பக்கம் பார்க்க

## யாழில் வெவ்வேறு இடங்களில் 218 கிலோ கஞ்சா மீட்பு
### 20 வயது இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)
கஞ்சா போதைப்பொருளை வீட்டில் பதுக்கிவைத்திருந்த குற்றச்சாட்டில் 20 வயது இளைஞன் ஒருவரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
நேற்று திங்கட்கிழமை காலை பருத்தித்துறை இன்பசிட்டியில் சந்தேக 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஈழத்தமிழர்களுக்கான உரிமையையும் நீதியையும் பெற்றுத்தர தமிழகத்திலிருந்து வலுவான குரல் ஒலிக்கட்டும்!

## ஸ்டாலினுக்கான வாழ்த்துச் செய்தியில் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

**இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான இனவழிப்புக்கு எதிராக அழுத்தமான குரல் ஸ்டாலின் மற்றும் தமிழ் நாட்டு அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கப்பெறும் எனவும், இனவழிப்புக்கான நீதியையும், ஈழத்தமிழர்களுக்கான உரிமையையும் பெற்றுத்தருவதற்கு தமிழகத்திலிருந்து வலுவான குரல் ஒலிக்கும் என்று நாம் நம்பிக்கை கொள்கின்றோம் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

ஸ்டாலினுக்கு விடுக்கப்பட்ட வாழ்த்து செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கி முதல் தேர்தலிலேயே சரித்திர வெற்றியை பெற்றுள்ள மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எமது தமிழ் மக்கள் சார்பாக எனது மனநிறைவான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஆறாவது முறையாக தமிழக சட்டப்பேரவையில் பெரும்பான்மையை பெற்று ஆட்சியமைக்க உள்ள திராவிட முன்னேற்ற கழக உடன்பிறப்புக்கள் அனைவருக்குமே வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து .கொள்கின்றேன்.

ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகத்தின் ஆட்சியில் தமிழகம் பல்வேறு துறைகளில் மென்மேலும் வளர்ச்சி அடையும் என்றும் இந்தியாவின் முன்னணி மாநிலமாக திகழும் என்றும் நான் உறுதியாக நம்புகின்றேன்.

2009ஆம் ஆண்டு தமிழ் ஈழப்பரப்பில் இடம்பெற்ற கொடூரமான இனவழிப்பின் தொடர்ச்சியாக இன்றுவரை தமிழர் பிரதேசத்தில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்பாக தொடருகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் தொடர்ச்சியான இனவழிப்புக்கு எதிராக அழுத்தமான குரல் ஸ்டாலின் மற்றும் தமிழ் நாட்டு அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கப்பெறும் எனவும், இனவழிப்புக்கான நீதியையும், ஈழத் தமிழர்களுக்கான உரிமையையும் பெற்றுத்தருவதற்கு தமிழகத்திலிருந்து வலுவான குரல் ஒலிக்கும் என்றும் நாம் நம்பிக்கை கொள்கின்றோம்.

அதேபோல, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருளாதாரம், கல்வி மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளில் மிகவும் நெருக்கமான உறவினை ஏற்படுத்துவதற்கும் ஸ்டாலின் தலைமையின் கீழ் தமிழக அரசாங்கம் காத்திரமான பல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்றும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மூதூரில் நீரில் மூழ்கிய பாடசாலை மாணவன் பலி

(திருமலை)

திருகோணமலை - மூதூர் பகுதியில் மாணவரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூதூர்- 2 ஜின்னா நகர் பகுதியைச் சேர்ந்த க.பொ.த சாதாரண தர மாணவன் நஜீப் அதீப் (16 வயது) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் அவரது நண்பர்களுடன் ஆலிம்சேனை எனப்படும் இடத்திலுள்ள ஆறு ஒன்றில் நேற்று குளிக்கச் சென்றபோது நீரில் மூழ்கியுள்ளதாக தெரியவருகின்றது.

அதனையடுத்து பொதுமக்களின் உதவியுடன் அவர் காப்பாற்றப்பட்டு மூதூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளதாக மரண விசாரணை அதிகாரி எம்.வை.எம். லாபிர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த மாணவனின் உடலை மரண விசாரணை அதிகாரியின் அறிக்கையின் பின்னர் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், அத்துடன் குறித்த இடத்தில் குளிப்பதனை தடை விதிக்க வேண்டும் எனவும் பிரதேச சபைத் தவிசாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ம)

# தனிமைப்படுத்தல் விதிகளுக்கு முரணான விருந்துபசாரங்கள் தொடர்பில் பொலிஸார் விசேட கண்காணிப்பு

## பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண

(கொழும்பு)

சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை மீறி நடைபெறும் விருந்துபசாரங்கள், நிகழ்வுகள் குறித்து விசேட கண்காணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கூறியுள்ளார்.

விடயம் தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு முரணான மதுபான விருந்துபசாரங்கள் இடம்பெறுவதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதற்கமைய பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கண்காணிப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கண் காணிப் பின் போது விருந்துபசாரங்கள் இடம்பெறும் இடங்கள் சுற்றிவளைக்கப்பட்டால் விருந்துபசாரத்தில் கலந்துக் கொண்டவர்கள் , ஏற்பாடு செய்தவர்கள் , விருந்துபசாரத்திற்கான இடவசதிகளை செய்து கொடுத்தவர்கள் மற்றும் மதுபானத்தை விநியோகித்தவர்கள் என அனைவருக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறியமை தொடர்பில் நேற்று முன்தினம் காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் 215 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 4,857 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். மேல்மாகாணத்தில் கடற்கரை மற்றும் ஆற்றங்கரை பகுதிகளில் குளிப்பவர்கள் தொடர்பிலும், அந்த பகுதிகளில் காணப்படும் உணவு விற்பனை நிலையங்கள் தொடர்பிலும் ஞாயிற்றுக்கிழமை விசேட கண்காணிப்பு முன்னெடுக்கப்பட்டது. இதன்போது 1,093 இடங்கள் சோதனைக் குட்படுத்தப்பட்டதோடு 6,328 நபர்கள் கண்காணிக்கப்பட் டனர்.

அவர்களுள் 38 பேர் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளுக்கு புறம்பாக செயற்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்போது பாதுகாப்பற்ற முறையில் உணவுப் பொருட்கள் விற்பனையில் ஈடுபட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 4,306 பேருக்கு சுற்றாடல் சட்டவிதிகள் தொடர்பில் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டிருந்தது. கொவிட்-19 வைரஸ் பரவல் தீவிரமாக பரவலடைந்து வருகின்ற நிலையில்

அதனை தடுக்கும் நோக்கத்திலே பொலிஸார் இது போன்ற சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றார்கள். இதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார். (ம)

# கொரோனாவால் இறக்கும் நபர்களின் உடல்கள் இலவசமாக தகனம்

## விரைவில் சுற்றறிக்கை

(கொழும்பு)

கோவிட் தொற்றால் உயிரிழக்கும் நபர்களின் உடல்களை இலவசமாக தகனம் செய்வதற்கான சுற்றறிக்கை வெளியிடப்படும் என அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், உள்ளூராட்சி சபைகளுக்கு சொந்தமான சுடுகாடுகளில் கோவிட் தொற்றால் இறக்கும் நபர்களை இலவசமாக தகனம் செய்ய முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மாத்தளை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார். (ம)

# றிசாத் பதியுதீன் மனைவி ஜனாதிபதிக்கு கடிதம்

முன்னாள் அமைச்சரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவருமான றிசாத் பதியுதீனின் மனைவியான ஆயிஷா றிசாத், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிற்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.

தனது கணவரின் தன்னிச்சையான கைது தொடர்பிலேயே இந்த கடிதம் எழுதப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆயிஷா றிசாத் இந்த கடிதத்தின் ஊடாக ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை ஏன் கைது செய்யவில்லை என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணையகம் ஞானசார தேரரை கொடிய குண்டு வெடிப்புகளுக்கு காரணமானவர்களில் ஒருவராக அறிவித்ததாக ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் ஆயிஷா ரிஷாத் குறிப்பிட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான நாடுகளில் இலங்கையும் ஒன்று

# இந்தியப் பிரஜை என சந்தேகித்தால் சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்கவும்

## உபுல் ரோஹண வேண்டுகோள்

(கொழும்பு)

**வேகமாக கொரோனா வைரஸ் பரவி வருவதனால், இலங்கை மிகவும் அபாய கட்டத்திலுள்ள ஒரு நாடாகும் என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.**

தற்போதைய கொரோனா நிலவரம் தொடர்பில் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் வைரஸ் மிக வேகமாக பரவுவதாகவே விசேட வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இருப்பினும் இதுவரை யில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வைரஸ் பரவியதாக உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறிருப்பினும் இந்திய பிரஜைகள் உலகின் ஏனைய நாடுகளுக்கு பரவலாகச் செல்கின்றனர். இலங்கை மிகவும் அபாயக் கட்டத்திலுள்ள நாடாகும். கடல் மார்க்கமாக பெரும்பாலான இந்திய மீனவர்கள் அநாவசியமாக நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே கடற்படையினர் மற்றும் பொலிஸாரிடம் இந்திய பிரஜைகள் நர்ட்டுக்குள் பிரவேசிக்கின்றனரா என்பது தொடர்பில் மிக அவதானத்துடன் கண்காணிக்குமாறு கோரிக்கை விடுக்கின் றோம். காரணம் இந்திய பிரஜைகள் நாட்டுக்குள் பிரவேசிப்பதன் மூலம் பிறிதொரு வைரஸ் பரவ ஆரம்பித்தால் நாடு என்ற ரீதியில் நாம் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

எனவே இந்திய பிரஜைகள் என்று சந்தேகிக்கின்ற எந்தவொரு நபரையும் அடையாளம் காணும் பட்சத்தில் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது சுகாதார தரப்பினருக்கு அறிவிக்குமாறு மீனவர்களிடமும் கடற்கரையை அண்மித்த பிரதேசங்களில் வாழும் மக்களிடமும் கேட்டுக் கொள் கின்றோம்.

இது தொடர்பில் மிக அவதானமாக செயற்படாவிட்டால் மீண்டும் வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிடும்என்பதே எமது நிலைப்பாடாகும் என அவர் தெரிவித்தார். (நி-4)

## இலங்கை வருகிறார் சீன வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யி அடுத்த மாதம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அண்மைய மாதங்களில் சீனாவிலிருந்து இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளும் மூன்றாவது உயர் அதிகாரியாக இவர் இருப்பார்.

வெளியுறவு அமைச்சர் வாங் யி தனது பிராந்திய பயணத்தின் ஒரு பகுதியாக இலங்கை வருவது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பாடசாலைகளை மீளத் திறப்பதில் அவசரம் கூடாது-பேராசிரியர் நீலிகா

(கொழும்பு)

இலங்கையில் வேகமாக பரவி வரும் புதிய மாறுபாட்டிற்கு குழந்தைகள் எளிதில் பாதிக்கப்படுவதால், பாடசாலைகளை திறக்கக் கூடாது என்று கொரோனா தொடர்பான முன்னணி ஆராய்ச்சியாளரும், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு அறிவியல் துறையின் தலைவருமான பேராசிரியர் நீலிகா மாலவிகே மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

பாடசாலைகள் மூடப்பட்டதை வரவேற்றுள்ள அவர் சிறுவர்களுக்கு கொரோனா பரவும் வாய்ப்பைக் குறைப்பதன் மூலம் தொற்றுநோயைத் தடுக்கமுடியும் என்று தெரிவித்துள்ளார்.

மாணவர்களை பல மாதங்களாக கல்வியில் இருந்து தூரத்தில் வைத்திருப்பது மிகவும் நியாயமற்றது.


மேலும் ஒரு சிறு தொகையினருக்கு மட்டுமே இணையம் மூலம் கற்றலுக்கான வசதிகள் இருப்பதை நாம் அறிவோம்.

எனினும் இப்போது நாங்கள் உயிரைக் காப்பாற்றுவதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு எந்த வகைகளையும் இறக்குமதிகளை செய்யாதிருப்பதை உறுதி செய்யவேண்டும். இத்தகைய இறக்குமதி சுகாதாரம், கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (நி-4)



# பூஜித, ஹேமசிறிக்கு எதிராக 800 குற்றச்சாட்டுக்கள்



(கொழும்பு)

முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியமை தொடர்பில் 800 குற்றச்சாட்டுக்களை சட்டமா அதிபர் மேல் நீதிமன்றில் முன்வைத்துள்ளார்.

குறித்த குற்றச்சாட்டுக்களை இரண்டு விஷேட நீதிமன்றங்களில் அவர் முன்வைத்துள்ளார்.

கொலை, கொலை முயற்சி மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியமை போன்ற குற்றச்சாட்டுக்களும் அவற்றில் அடங்கும். (நி-4)

## வீதியில் உயிரிழந்தவருக்கு கொரோனா

(கொழும்பு)

வீதியில் மயங்கி விழுந்த ஒருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த நபருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதகைகளில் அவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி உள்ளமை தெரியவந்துள்ளது.

வென்னப்புவ - புஜ்ஜம் பொல பகுதியை சேர்ந்த 50 வயதுடைய ஒருவரே நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

# நான்கு பிரதான தபால் நிலையங்கள் மூடல்

(கொழும்பு)

நாற்பதுக்கும் மேற்பட்ட தபால் ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக கொம்பனித்தெரு, பாணந்துறை, வாழைத்தோட்டம் மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளின் பிரதான தபால் நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோஸ் பட்லரின் அபார ஆட்டத்தால் ஐதராபாத்தை வீழ்த்தியது ராஜஸ்தான்

14 ஆவது ஐ.பி.எல்.கிரிக்கெட் போட்டியின் 28 ஆவது லீக் ஆட்டம் டில்லியில் உள்ள அருண் ஜெய்ட்லி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கேன் வில்லியம்சன் தலைமையிலான சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியும் சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ்அணியும்மோதின.

டொஸ் வென்ற ஐதராபாத் அணியின் கப்டன் கேன் வில்லியம்சன், பந்துவீச்சை தேர்வு செய்தார். இதையடுத்து முதலில் பட்டிங் செய்த ராஜஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில், 3 விக்கெட்டுகளை இழந்து 220 ரன்கள் குவித்தது.

இதில் பட்லர் 124, சாம்சன் 48 ஓட்டங்களை எடுத்தனர். இதையடுத்து 221 ரன்கள் என்ற இலக்கை நோக்கி விளையாட துவங்கிய ஐதராபாத் அணியின் ஆட்டக்காரர்களாக மனீஷ் பாண்டே மற்றும் ஜானி பேர்ஸ்டோ களமிறங்கினர். ஐதராபாத் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 165 ரன்கள் மட்டுமே எடுத்தது.

இதன்மூலம் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 55 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ராஜஸ்தான் அணியில் அதிகபட்சமாக முஸ்தபிஜுர் ரஹ்மான் மற்றும் கிறிஸ் மோரிஸ் தலா 3 விக்கெட்டுகளும் கார்த்திக் தியாகி மற்றும் ராகுல் தெவாட்டியா தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக ஜோஸ் பட்லர் தெரிவு செய்யப்பட்டார். (4-6)




## கொல்கத்தா வீரர் இருவருக்கு கொரோனா தொற்று

ஐ.பி.எல்.கிரிக்கெட் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், கொல்கத்தா அணியில் விளையாடும் தமிழக வீரரான வருண் சக்கரவர்த்தி மற்றும் கேரளாவைச் சேர்ந்த சந்தீப் வாரியர் ஆகியோருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல்.போட்டியில் விளையாடும் வீரர்கள் கடுமையான பயோ பாதுகாப்பு வளையத்தில் உள்ளனர். இதையும் மீறி வீரர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

## இலங்கை தேசிய-கிரேட் லெவன்ஸ் இருபது-20 போட்டி ஒத்திவைப்பு

இலங்கைத் தேசிய மற்றும் இலங்கை கிரேட் லெவன்ஸ் அணிகளுக்கிடையிலான இருபது-20 கிரிக்கெட் போட்டி திட்டமிட்டபடி நடைபெற மாட்டாது என்று இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் நேற்று அறிவித்துள்ளது.

கொவிட் -19 நிதிக்கு நிதி திரட்டும் நோக்கத்துடன் இந்த போட்டி நடத்த திட்டமிடப்பட்ட போதிலும் நாட்டில் நிலவும் ஆபத்தான சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு போட்டியை மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் அறிவித்துள்ளது.

அதேநேரம் இலங்கை தேசிய அணியில் எதிர்வரும் போட்டிகளில் விளையாட திட்டமிடப்பட்டுள்ள வீரர்களின் பாதுகாப்பையும் இலங்கை கிரிக்கெட் கருத்திற் கொண்டுள்ளது.

எனினும் இந்த உன்னத போட்டியை நடத்த உதவ முன்வந்த முன்னாள் வீரர்கள், தற்போதைய வீரர்கள், அதிகாரிகள் மற்றும் வணிக பங்காளர்கள் அனைவருக்கும் இலங்கை கிரிக்கெட் நன்றி தெரிவித்துள்ளது.(4-6)

## பஞ்சாப்பை வீழ்த்தியது டெல்லி


14 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் 29 ஆவது ஆட்டம் அகமதா பாத்திலுள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

இதில் ரிஷப் பண்ட் தலைமையிலான டெல்லி கப்பிட்டல்ஸ் அணியும் மயங்க் அகர்வால் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணியும் மோதின.

முதலில் ஆடிய பஞ்சாப் அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 166 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக மயங்க் அகர்வால் 99 ரன்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

இதனையடுத்து 167 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டெல்லி அணி களமிறங்கியது. அந்த அணி 17.4 ஓவரில் 3 விக்கெட் மட்டும் இழந்து 167 ரன்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ஷிகர் தவான் 69 ரன்கள் அடித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றார்.(4-6)

## ஒசாகாவை தோற்கடித்தார் முச்சோவா



மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடந்து வருகிறது. களிமண் தரை போட்டியான இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடந்த 2 ஆவது சுற்று ஆட்டம் அவுஸ்திரேலிய ஓபன் சம்பியனுமான நவோமி ஒசாகா தரவரிசையில் கரோலினா முச்சோவாவை எதிர் கொண்டார்.

விறுவிறுப்பான இந்த மோதலில் முச்சோவா 6-4, 3-6, 6-1 என்ற செட் கணக்கில் ஒசாகாவுக்கு அதிர்ச்சி அளித்தார். இந்த ஆட்டம் ஒரு மணி 49 நிமிடங்கள் நீடித்தது.

இந்த சீசனில் டொப்-5 இடத்தில் உள்ள வீராங்கனையை முச்சோவா வீழ்த்துவது இது 3 ஆவது முறையாகும். (4-6)

## அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் கொரோனா பாதிப்புக்கு 37 இலட்சம் நிதி

கொரோனா 2 ஆவது அலையின் தாக்கம் மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் நிலையில் தடுப்பூசி, ஒட்சிசன் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் இந்தியா திணறி வருகிறது.

தினசரி பாதிப்பு நாள் தோறும் உயர்ந்த வண்ணமாய் உள்ளது. பலி எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது.

தடுப்பூசி, ஒட்சிசன் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் இந்தியா திணறுகிறது. பல்வேறு நாடுகள்இந்தியாவுக்குக்கொரோனா உதவிகளை அளித்து வருகிறது. இந்த நிலையில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியமும் அந்த நாட்டு யுனிசெப் அமைப்பும் இணைந்து இந்தியாவுக்கு கொரோனா உதவித் தொகையாக ரூ 37 இலட்சம் வழங்குவதாக அறிவித்துள்ளது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டுமாறு பன்னாட்டு இராஜதந்திரிகளிடம் கோரிக்கை



**(கொழும்பு)**

**அரசாங்கத்திற்குள் காணப் படும் பனிப்போரை கைவிட்டு கொவிட் வைரஸ் தொற் றிலிருந்து மக்களைப் பாதுகாக்க உலகின் செல்வந்த நாடுகளின் ஒத்துழைப்பு களை பெற்றுக்கொள்ள முயற் சிக்க வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித்பிரேமதாஸ தெரிவித்தார்.**

இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டு மாறு பன்னாட்டு இராஜதந் திரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிறுக்கிழமை காணொளி பதிவின் ஊடாக விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்து இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

பன்னாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பில் கொவிட்-19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த இலங்கையின் மருத்துவ கட்டமைப்பிற்கு வழங்கப்படக் கூடிய அதிகபட்ச மருத்துவ உபகரணங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்.

அத்தோடு தனிப்பட்ட ரீதியில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இலங்கைக்கு தேவையான அத்தியாவசிய தேவையாகக்காணப் படுகின்ற தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள ஒத்துழைப்பு வழங்குமாறும் இராஜதந்திரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறுகிய நேரத்தில் அதிக எவிலான பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு உகந்த பி.சி.ஆர். இயந்திரத்தை பெற்றுக் கொடுக்குமாறும் கோரியுள்ளோம்.

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையில் நடமாடும் வைத்தியசாலைகள் அத்தியாவசியமானவையாகும். இது தொடர்பில் தூதுவர்களுடனான சந்திப்பின் போது அவதானம் செலுத்தப்பட்டது.

எமது பிரதான இலக்கு சகல மக்களையும் கொவிட் பாதிப்பிலிருந்து காப்பாற்றுவதாகும். இதன் மூலம் அரசியல் இலாபம் பெறுவது எமது எதிர்பார்ப்பல்ல.

நாம் ஒருபோதும் கொரோனாவை அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப் போவதில்லை. எனவே தற்போது அரசாங்கத்திற்குள் காணப் படும் பனிப்போரை கைவிட்டு மக்கள் நலத் திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்க முன்வர வேண்டும்.

பெருமளவான மக்கள் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே வெகு விரைவில் தடுப்பூசி பிரச்சினைக்கு தீர்வு காணுமாறும், நடமாடும் வைத்தியசாலைகளை நிறுவுமாறும், பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவை அதிகரிக்குமாறும், அதற்கு தேவையான வெளிநாட்டு நிதியுதவியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். வெளிநாடுகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுங்கள்.

கொவிட் ஒழிப்பிற்காக எதிர்க்கட்சி என்ற ரீதியில் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க தயாராகவுள்ளோம். உலகிலுள்ள தனவந்த நாடுகளுடன் நட்புறவைப் பேணி அந்நாடுகளிடமிருந்து அதிகபட்ச உதவியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இதேபோன்று நாட்டு மக்களும் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்ற வேண்டும். நாமனைவரும் ஒன்றிணைந்து கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவோம்.

அதன் பின்னர் ஜனநாயக ரீதியில் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும். அதுவரையில் அனைவரும்ஒன்றாககைகோர்த்து நாடு என்ற ரீதியில் பயணிப்போம் என சஜித் தெரிவித்தார். (நி-4

## மூன்று பிள்ளைகள் உள்ளனர் என்னைக் காப்பாற்றுங்கள்...

### கொவிட் நோயாளியின் இறுதித் தருணம்

(கொழும்பு)

இலங்கையில் கொவிட் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த நபர் ஒருவர் தொடர்பில் சோகமான செய்தி ஒன்று இணையத்தில் வெளியாகியுள்ளது. உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட குறித்த நோயாளி தன்னைக் காப்பாற்றுமாறு வைத்தியர்களிடம் கெஞ் சியுள்ளார். எனினும் சிகிச்சை பலனின்றி குறித்த நோயாளி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மற்றுமொரு கொவிட் நோயாளி ஒருவர் வெளியிட்ட பதிவில்,"மடம், என்னால் உயிரிழக்க முடியாது. என்னால் சுவாசிக்க முடியாது. என்னை உயிரிழக்க விடாதீர்கள். என்னை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதியுங்கள். எனக்கு சிறு குழந்தைகள் 3 பேர் உள்ளனர். கெஞ்சிக் கேட்கிறேன். எனினும் அவ்வாறு கூறிய 42 வயதுடைய தந்தை கடந்த 2 நாட்களுக்கு முன்னர் உயிரி ழந்துள்ளார்.

இவ்வாறான சம்பவத்தில் பாதிக்கப்படும் நபராக நீங்கள் மாறிவிடாதீர்கள். அவதானமாக இருங்கள். அவ்வளவு தான்" என அவர் பதிவிட்டுள்ளார். (நி-4)

## சட்டவிரோதமாக வரும் இந்தியர்களுக்கு உதவினால் அனுமதிப்பத்திரம் ரத்தாகும்

(கொழும்பு)

சட்டவிரோத குடியேறிகளை படகில் ஏற்றிவரும், இலங்கையின் கடல் எல்லையின் ஊடாக பயணிப்பதற்கு வெளிநாட்டுப் படகுகளுக்கு உதவி செய்யும் மீனவர்கள் கைது செய்யப்படுவர் என கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து வகையான அனுமதிப்பத்திரமும் இரத்துச் செய்யப்படும் எனவும் அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-4)

## கர்ப்பிணிப் பெண்கள் 70 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொவிட்-19 தொற்றுறுதியான 70 கர்ப்பிணி தாய்மார்கள் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவ்தாக சமுதாய சுகாதார வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வரையில், கொவிட்-19 தொற்றுறுதியான 70 கர்ப்பிணி தாய்மார்கள் அடையாளம் காணப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சூழ்நிலையில், கர்ப்பிணி தாய்மார்கள் முடியுமானளவு தமது பயணங்களைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

பிறந்து ஒரு மாதம் முதல் 6 மாதம் வரையிலான குழந்தைகளுக்கும் கொவிட்-19 தொற்றுறுதியாகியுள்ளது.

மூச்சுத்திணறல் உள்ளிட்ட நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் வீடுகளில் இருப்பார்களாயின் அவர்களுக்கு அருகில் குழந்தைகளை அனுமதிப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன், சிறுவர்களுக்கு எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் வகையில் வீடுகளில் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் சமுதாய சுகாதார வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார். (நி-4)

## ரஷ்யத் தூதுவர்-சஜித் சந்திப்பு



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் யூரி மேட்டரிக் கிடையிலும் சிறப்பு சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இச் சந்திப்பானது நேற்று கொழும்பு - எதுல்கோட்டையில் அமைந்துள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

தற்போது கொரோனா பேரழிவால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு தேவையான மருத்துவ உபகரணங்களைப் பெற உதவிகளை செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரஷ்ய தூதுவரிடம் இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனை சாவடி இருப்பது மக்களை வசதிக்காகவே- டக்ளஸ்

(நெளுக்குளம்)

**இராணுவச்சோதனை சாவடிகள் எங்களிற்கு வசதியாக இருப்பதுடன் நாங்கள் அதனை வசதியாக மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர அதனை கெடுபிடி என்று நோக்கக்கூடாது என கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**

நேற்று வவுனியாவில் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

கொரோனா என்பது இலங்கையில் மாத்திரமல்ல எல்லா நாடுகளிலுமே தற்போது பாரிய அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது. சில நாடுகளில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அதில் இந்தியாவையும் குறிப்பிடலாம்.

ஆனால் இலங்கையை பொறுத்தவரை கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும் சில கவனக்குறைவு காரணமாக மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ளது.

இருந்த போதும் இதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையை அரசாங்கம் எடுத்து வருகின்றது.

அரசாங்கம் பல்வேறு சுகாதார நடவடிக்கைகளை சுகாதார முறைகளில் பேணுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக வீதியிலே இருக்கின்ற இராணுவச் சோதனை சாவடிகளில் இராணுவத்தினர் முகக் கவசம் அணியாதவர்களை மறித்து அணிந்து செல்லுமாறு அறிவுறுத்தி வருகின்றனர்.

இராணுவச்சோதனை சாவடிகள் எங்களிற்கு வசதியாக இருப்பதுடன் நாங்கள் அதனை வசதியாக மாற்றிக் கொள்ள வேண்டுமே தவிர அதனை கெடுபிடி என்று நோக்கக்கூடாது. அவர்கள் முகக்கவசம் அணிந்து செல்லுமாறு அறிவுறுத்தி வருகின்றனர்.

அதனை சொல்லுவதற்கும் ஒருவர் தேவைதானே. அதனைத்தான் அவர்கள் செய்து வருகின்றனர். ஆகவே சோதனைச்சாவடி இருப்பதால் முகக்கவசம் அணிய வேண்டும் என் அனைவரும் கவனமாக இருப்பார்கள். அத்தோடு சோதனை சாவடி நிரந்தரமாக்க வேண்டிய தேவை இல்லை என அவர் தெரிவித்தார்.(5-299)




சர்வதேச ஊடக சுதந்திர தினத்தினை முன்னிட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நேற்றுத் திங்கட்கிழமை யாழ்.ஊடக அமையத்தில் இடம்பெற்றது. கொரோனாத் தொற்று காரணமாக மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

(படம்:- சிவசாந்தன்)




மே தினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் கொரோனாவால் முடக்கப்பட்ட 15 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கியது.

# அபிவிருத்தி ஒதுக்கீடுகள் சமமாக இருக்க வேண்டும்

## பிரதேசசபை உறுப்பினர்கள்

(சாவகச்சேரி)

அபிவிருத்தி ஒதுக்கீடுகளை சகல உறுப்பினர்களுக்கும் சமமாக பங்கிடுமாறு சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்கள், பிரதேசசபைத் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

குறித்த கடிதத்தில் 2020 ஆம் ஆண்டு சாவகச்சேரி பிரதேசசபைக்கு கிடைக்கப்பெற்ற மேலதிக வருமானத்திலிருந்து மக்கள் கோரிக்கையை ஏற்று சில வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு சபையின் அங்கீகாரம் கோரப்பட்டது. மக்களின் கோரிக்கை என்பதால் சபை அதனை ஏற்றுக்கொண்டது.

இருப்பினும் பின்னர் குறித்த செய்தி மக்களைச் சென்றடைந்த போது மக்கள் கடும் எதிர்ப்பினை காட்டியிருந்தனர். அதன் பின்னர் உறுப்பினர்கள் இது தொடர்பாக ஆராய்ந்த போது அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட வீதிகள் மற்றைய வீதிகளுடன் ஒப்பிடுகையில் தேவைப்பாடு அற்ற வீதிகளாகவும் குறித்த வீதிகள் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட வீதிகள் அல்ல என்பதும் தெரியவந்தது.

இதனால் மக்கள் மத்தியிலும் சபை உறுப்பினர்கள் மத்தியிலும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்து தேவைப்பாடு அதிகம் நிலவும் திட்டங்களை முன்னுரிமைப் படுத்த வேண்டும் எனவும் அத்துடன் எதிர்காலத்தில் அபிவிருத்தி ஒதுக்கீடுகளை சகல உறுப்பினர்களுக்கும் சம அளவில் பங்கீடு செய்ய வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தனர்.

குறித்த கடிதம் சபையில் உள்ள 31 உறுப்பினர்களில் 17 உறுப்பினர்களின் கையொப்பத்துடன் பிரதேசசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)

# கார்-சைக்கிள் விபத்து

## ஒருவர் காயம்

(சாவகச்சேரி)



தென்மராட்சி-புத்தூர்ச் சந்திப் பகுதியில் இராமாவில் முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் ஏ-9 வீதியில் நேற்று திங்கட்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

துவிச்சக்கரவண்டியும் காரும் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த மந்துவில் கிழக்கு கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த நபரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-30)



யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி 21ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கணிதப் பிரிவு மாணவிகள் நேற்று கரவைவெல்லன் விநாயகர் ஆலய வளவில் மரக்கன்றுகள் நாட்டி வைத்தனர்.

(படம்:மகாலிங்கம்)


# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

அமரர். இராமச்சந்திரன் தனுசன் நினைவாக ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை உடுப்பிட்டி இலக்கணாவத்தை தேவன்குறிச்சி அறிவகம் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் குருதிக் கொடை முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் சுகாதார முறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை நல்வழிப்படுத்த அரசிற்கு உறுதுணையாக
# ஊடகங்களே திகழ வேண்டும்
## ஊடக சுதந்திர நாளில் ஜனாதிபதி



(கொழும்பு)

உண்மைச் செய்திகளை மக்களிடம் கொண்டு சென்று சேர்ப்பது மட்டுமே ஊடகங்களின் பணி அல்ல, உண்மையற்ற செய்திகள் மக்களுக்குள் பரவி குழப்ப நிலைகளை ஏற்படுத்துவதையும் ஊடகங்களே பொறுப்புடன் தடுக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அனைத்துலக ஊடக சுதந்திர நாளான நேற்றைய தினம் தெரிவித்தார்.


இன்று நாடு சந்தித்து நிற்கும் பெரும் சுகாதார நெருக்கடியான ஒரு காலகட்டத்தில், அவ்வாறு செயற்படுவதே ஊடகங்களின் பெரும் பொறுப்பாகவும் இருக்க முடியும்.

நிறைவுகள் தொடர்பாகப் பேசுவதைத் தவிர்த்து, குறைகளை மட்டுமே கேள்விக்கு உட்படுத்தி, ஒரு நாட்டையும் அதன் மக்களையும் திறம்பட நிர்வகித்துச் செல்வதில் ஓர் அரசாங்கம் சந்திக்கும் சவால்களை விமர்சிப்பது அல்லாமல், மக்களை நல்வழிப்படுத்திச் செல்வதில் அரசாங்கத்திற்கு ஆக்கபூர்வமானதாகவும் உறுதுணையாக்வும் ஊடகங்களே திகழ வேண்டும்.

அவையே, ஊடக சுதந்திரம் என்பதன் உள்ளார்ந்த அர்த்தம் ஆகும்.

எமது நாட்டில் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் எமது அரசாங்கம் உறுதிப்பாட்டோடு உள்ளதாக்வும் ஜனாதிபதி தெரிவித்தார். (நி-4)

## சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சராக திலும் அமுனுகம நியமனம்



(கொழும்பு)

சமூக பொலிஸ் சேவைகள் இராஜாங்க அமைச்சராக திலும் அமுனுகம நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

திலும் அமுனுகம வாகனங்கள் ஒழுங்குறுத்துகை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகனைத் தொழில் இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகிக்கின்றார். (நி-4)

## மிருகக்காட்சிசாலைகளுக்குப் பூட்டு

(கொழும்பு)

இன்று தொடக்கம் நாட்டில் உள்ள சில மிருகக்காட்சிசாலைகளை தற்காலிகமாக மூடவுள்ளதாகத் தேசிய விலங்கியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, தெஹிவளை மிருகக்காட்சிசாலை, பின்னவலை யானைகள் சரணாலயம், பின்னவலை மிருகக்காட்சிசாலை மற்றும் ரிதியகம சஃபாரி பூங்கா ஆகியவை மறு அறிவித்தல் வரை மூடப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)


# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
## கோப்பாய் உப அலுவலகம்
## ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 09, முனிகோவிலடி ஒழுங்கை, ஆதன இலக்கம் 27 என்ற இலக்கத்தைக் கொண்டதும் "பூச்சன் வளவு" நிலப்பரப்பு பரப்பு 03 குழி 15 கொண்ட கிராம சேவையாளர் பிரிவு: **J/258**, கோப்பாய் கோவிற்பற்று இருபாலை இறையில் அமைந்துள்ள ஆதனத்தின் உரிமையாளர் பெயர் **A.**கண்மணி என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை முனிகோவில் வீதி, இருபாலை கிழக்கை சேர்ந்த இன்பரதிகுணம் **(577732048v)** நிலப்பரப்பு03 குழி 15 இற்கும் உரிமை கோருகின்றார்.

மேற்படி ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு திருமதி.எஸ்.கங்காதரன் அவர்களால் எழுதப்பட்ட 13147 ஆம் இலக்க 2015.05.21 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் வேலுப்பிள்ளை பரிமளராசா மற்றும் வேலுப்பிள்ளை பேரின்பராசா என்பவர்களினால் ரூபா **100,000/=** தரப்பற்றிக் கொண்டதன் மூலம் தடையற்ற ஆட்சியுமானது என இன்பரதிகுணம் **(577732048v)** இற்கு கிரயமாக வந்தடைந்தது.

மேற்படி நிலப்பரப்பு பரப்பு 03 குழி 15 இற்கு எல்லைகளாக கிழக்கு நல்லதம்பி தம்பையாவிற்கும், சங்கரப்பிள்ளை அழகரத்தினம் பெண் பவளம்மாவிற்குரிய ஆதனங்கள். வடக்கு ஒழுங்கைக்குரிய ஆதனம், மேற்கு சின்னப்பு அப்புத்துரைக்குரிய ஆதனம், தெற்கு ராசமணி வேலுப்பிள்ளைக்குரிய ஆதனம். இவ்வாதனம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.பாலேந்திரன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 1385 ஆம் இலக்க 19.11.2017 ஆம் திகதிய படத்தில் **Lot – 01** என குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

இவ் ஆதனத்தை இன்பரதிகுணம் என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 03.06.2021 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இன்பரதிகுணம் என்ற பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் சேவையுணர்வுடன் அறியத்தருகின்றேன்.

(C-2097)

**தியாகராஜா நிரோஷ்**
**தவிசாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.** **04.05.2021**



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 18 1/2 செவ், சூரி 4 இல் உயரம்: **173cm**<br>தகைமை/தொழில்: விவசாய விஞ்ஞானி, விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி, அரச உத்தியோகம், வெளிநாடும் பார்க்கப்படும்<br>தொ.இ: **B/11864** | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 14 செவ் 6 சூரி 10 இல் உயரம்:5'1"<br>தகைமை/தொழில்: மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு மட்டும், அரச உத்தியோகம்<br>தொ.இ: **G/11891** |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: - செவ், சூரி 3 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: **A/L,** கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டில் **PR** உள்ள பெண்<br>தொ.இ: **B/11868** | பிறப்பு: 1998 கிறிஸ்தவம் **N.R.C**<br>தகைமை/தொழில்: **BSc**<br>எதிர்பார்ப்பு: **UK** உள்ள அல்லது **UK** செல்லக்கூடிய கிறிஸ்தவ பொறியியலாளர்/ மருத்துவர்/பட்டதாரி<br>தொ.இ: **G/11892** |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 13 செவ் 11 சூரி 12 இல் உயரம்: **175cm**<br>தகைமை/தொழில்: **BSc,Masters in IT A.V programmer (Australia)**<br>எதிர்பார்ப்பு: உள்நாடு, அழகான, படித்த ஆங்கிலம் பேசக்கூடிய பெண்<br>தொ.இ: **B/11869** | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: - செவ், சூரி 5 இல் உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: **BCS, DMO Jaffna**<br>எதிர்பார்ப்பு: தகுதியுள்ள தனியார் அரச தொழில்<br>தொ.இ: **G/11895** |
| பிறப்பு:1987 இந்து நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 10 1/2 செவ் 9 சூரி 10 இல் உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:டுபாயில் இருந்து வந்து பெருந்தோட்டம் செய்கிறார்<br>எதிர்பார்ப்பு: ஓரளவு படித்த பெண் விரும்பத்தக்கது<br>தொ.இ: **B/11870** | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா:47 செவ் 6 சூரி 9 இல் உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: **A/L**<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: **G/4382** |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



## அறிவித்தல்

05.05.2021 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவிருந்த நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் அசாதாரண நிலைமை காரணமாக (கொவிட்-19) பிற்போடப்பட்டுள்ளது. கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(C-2095)

**தலைவர், நோயாளர் நலன்புரிச் சங்கம்,**
**மாவட்டப் பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்திக்கடலை துப்புரவு செய்துதருமாறு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

**வட்டுவாகல் பாலத்தின் அடைப்புகளை நீக்குவது நந்திக் கடலினை துப்புரவு செய்வதாக அமையாது என முல்லைத் தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.**



கடந்த 2010ஆம் ஆண்டில் முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தினால் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திடம் நந்திக்கடலினை துப்புரவு செய்து தரும்படி கோரிக்கை கையளிக்கப்பட்டது.

அத்திட்டத்தில் வட்டுவாகல் பாலத்தினை புனரமைத்தல் அல்லது புதிய இடத்தில் அமைத்தல், தற்போது வட்டுவாகல் பாலத்தில் இருந்து வற்றாப்பளை பக்கமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு நந்திக்கடலில் உள்ள சேற்றினை அகற்றித் தரும்படி அத்திட்டத்தில் கோரப்பட்டிருந்தது.

போர்க்காலத்தில் அமைக்கப்பட்ட மண் அணைகள் கரைந்து நந்திக்கடலில் சேறாக மாறியுள்ளது.

நந்திக்கடல் கோடை காலங்களில் வேகமாக வற்றிவிடும் தன்மை காரணமாக நந்திக்கடலில் உள்ள சேற்றினை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இரண்டு இலட்சம் ரூபாய் வரையான நிதியினைப் பயன்படுத்தி வட்டுவாகல் பாலத்தின் அடைப்புகள் நீக்கப்பட்டன.

நந்திக்கடலின் துப்புரவுப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

நந்திக்கடலில் உள்ள சேற்றினை அகற்றுவதன் மூலம் நந்திக்கடலின் கடல் வாழ் உயிரினங்களின் பெருக்கம் அதிகரிக்கும்.

நந்திக்கடலின் துப்புரவுப் பணிகளை விரைவாக முன்னெடுப்பதற்கு கடற்றொழில் அமைச்சர் மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என நந்திக் கடலினை நம்பியுள்ள ஐயாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்களின் கோரிக்கையாக உள்ளது எனவும் தெரிவித்தார். (5-4-350)



வவுனியாவில் அமைந்துள்ள உணவகங்களில் விசேட மேற்பார்வை நடவடிக்கை நேற்று சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டது. (படம்: சதீஷ்)

# மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த இராணுவ காவலரண் அமைக்கவும்

(அக்கராயன்)

முல்லைத்தீவின் புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தொடர்கின்ற மணல் அகழ்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு கொக்காவில் பகுதியில் இராணுவ காவலரண் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி கிராமங்களில் உள்ள ஆற்றுப்படுகைகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுகின்றன.

துணுக்காய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களில் இவ்விடயம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

புத்துவெட்டுவானில் இருந்து கொக்காவில் வரையான புனரமைக்கப்பட்ட வீதி மணல் டிப்பர்களினால் சேதமாகின்றன.

எனவே இப்பகுதிகளில் இடம்பெறும் தொடர்ச்சியான மணல் அகழ்வைத் தடுப்பதற்கு இராணுவ காவலரண் ஒன்றை அமைக்குமாறு புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், பழையமுறிகண்டி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை அண்மையில் தரமுயர்த்தப்பட்டுள்ள ஐயன்கன்குளம் பொலிஸ் நிலையப் பொலிஸாரும் இப்பகுதிகளில் நடைபெறுகின்ற மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (5-4-350)

# தண்ணிமுறிப்புக் குளச் சூழலில் இடிதாங்கி பொருத்த வேண்டும்

## பிரதேச சபை உறுப்பினர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு தண்ணிமுறிப்புக்குள சூழலில் இடிதாங்கி பொருத்துவதற்கான நடவடிக்கையை முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் எடுக்க வேண்டும் என கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் இரத்தினசிங்கம் கவாஸ்கர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் தண்ணிமுறிப்பு வயல் வெளியில் மூன்று விவசாயிகள் இடிமின்னல் தாக்கத்தினால் உயிரிழந்தனர்.

தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் காலபோகத்தில் 4 ஆயிரம் ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ள முடியும்.

தற்போது சிறுபோகத்தில் 2 ஆயிரத்து 200 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

01 தொடக்கம் 12 வரையான கண்டங்கள் உள்ளன. மூன்று விவசாயிகளின் உயிரிழப்புக்கு பின்னர் இக்குளத்தின் கீழ் இடிதாங்கி பொருத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் விவசாயிகள் உள்ளனர்.

விவசாயிகளின் இக் கோரிக்கையினை நீர்ப்பாசனத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களம் மற்றும் மாவட்டச் செயலாளரிடம் விடுத்துள்ளோம்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையில் எதிர்வரும் அமர்வில் எனது பிரேரணையாக தண்ணிமுறிப்புக்குளச் சூழல் பகுதியில் இடிதாங்கி பொருத்த வேண்டும் என்ற பிரேரணையினை கொண்டு செல்ல உள்ளேன் எனவும் தெரிவித்தார். (5-4-350)

# கிளிநொச்சி பொலிஸார் நால்வருக்குத் தொற்று

(முறிகண்டி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தினைச் சேர்ந்த பொலிஸார் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் குறித்த பொலிஸார் கடமை நிமிர்த்தம் வெளி மாவட்டங்களுக்குச் சென்று திரும்பிய நிலையில் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். அத்துடன் அவர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டதில் தொற்று இருப்பது தெரியவந்தது.

அதனையடுத்து பொலிஸாரை கொரோனா தடுப்பு வைத்திய சாலைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. (5-4-100)




# வீதியோரப் பற்றைகளை அகற்றுமாறு மக்கள் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு திருமுறிகண்டியில் இருந்து கிளிநொச்சி அக்கராயன் செல்லும் வீதி தற்போது ஆபத்தான வீதியாக மாறியுள்ளது. திருமுறிகண்டியில் இருந்து அக்கராயன்வரையான பத்து கிலோ மீற்றர் தூரத்தினை கொண்டது. வீதியின் இரு பக்கமும் பற்றைகள் வளர்ந்து வீதியினை மூடுமளவிற்கு வளர்ந்துள்ளன.

இதன்காரணமாக காட்டில் இருந்து வரும் யானைகளை போக்குவரத்தில் ஈடுபடுபவர்களினால் அவதானிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

திடீரென யானைகள் வீதியில் வருவதன் காரணமாக பயணத்தில் ஈடுபடுபவர்கள் யானைகளினால் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

அக்கராயன் குளத்தின் சூழலில் இருந்து யானைகள் அடிக்கடி வீதியினைக் கடக்கின்றன. குறித்த வீதியின் இருபுற பற்றைகளையும் துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறித்த வீதியினை கிளிநொச்சி மேற்கின் பல கிராமங்கள் பயன்படுத்துகின்றன. கிளிநொச்சி பிரதேச வைத்தியசாலையின் அம்புலன்ஸ் கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்குச் செல்வதற்கு இவ்வீதியே பயன்படுத்தப்படுகின்றது.

எனவே இவ்வீதியின் இரு பக்கமுள்ள பற்றைகளையும் அகற்றி தூரத்திலேயே யானைகளை இனங்காண்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் தெரிவிக்கின்றனர். (5-4-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

04.05.2021
சித்திரை 21, செவ்வாய்க்கிழமை,
அட்டமி முன்னிரவு 6.37 மணிவரை
திருவோணம் பிற்பகல் 1.35 மணிவரை
சுபநேரம் 10.26-11.56 மணிவரை
இராகுகாலம் 2.56-4.26 மணிவரை
சந்திராஷ்டமம்- திருவாதிரை, புநர்பூசம்
அக்கினி நாள் ஆரம்பம்

வளவன்


மேஷம்

புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண் பீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த் தியாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


ரிஷபம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்கும்.


மிதுனம்

நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண் டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலை யிடுவதைத் தவிர்ப்பது நல்லது, மனச் சஞ்சலங்கள் கூடும் நாள்.


கடகம்

நட்பால் நல்ல காரியமொன்று நடை பெறும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


சிம்மம்

சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கன்னி

பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், மன நிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப் பீர்கள்.


துலாம்

செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்ற லால் சிறப்படைவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சுப காரியச் செயல்களில் தாராளம் காட்டுவீர்கள்.


விருச்சிகம்

பொது வாழ்வில் புகழ் கூடும், வழிபாட் டில் நம்பிக்கை வைப்பீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், உற வினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


தனுசு

எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் மேன் மையும் உயர்வும் கிடைக்கும், குடும்பத் தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.


மகரம்

பாராட்டும், புகழும் கூடும்நாள், முன்னேற் றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆரம் பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய விடயம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும்.


கும்பம்

சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைக ளைச் செய்யலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


மீனம்

விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப் புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

இந்த உலகத்தில் நம்பிக்கையுள்ள நண்பர்கள் புத்தகங்களே

# மாகாணசபைத் தேர்தல் இவ் வருடம் சாத்தியமில்லை

(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தல் முறைமை குறித்து இம் மாத காலத் திற்குள் உறுதியான தீர்வை எடுக்க எதிர்பார்த்துள்ளோம். தற்போ தைய நெருக்கடியான சூழ்நிலையில் மாகாண சபை தேர்தலை இவ்வருடத்தில் நடத்துவது கடினமாகும்.**



கொவிட்-19 வைரஸ் தாக் கத்தை எதிர்கொள்வது தற் போதைய சூழ்நிலையில் சவால் மிக்கதாக காணப்படுகிறது என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரண சிங்க தெரிவித்தார்.

மாகாண சபை தேர்தல் குறித்து வினவிய போது மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

மாகாண சபை தேர்தல் குறித்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் அமைச்சரையில் சமர்ப்பித்துள்ள யோசனை குறித்து எவ்வித தீர்மானங் களும் இதுவரையில் எடுக்கப் படாத நிலை காணப்படுகிறது. யோசனையின் ஒரு சில உள் ளடக்கங்களுக்கு அரசியல் கட்சி தலைவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

மாகாண சபை தேர்தலை நடத்துவதில் பல்வேறுபட்ட சிக்கல் நிலை காணப்படுகி றது. மாகாண சபை தேர்தல் முறைமையை அவற்றில் பிர தானமானவையாக குறிப்பிட வேண்டும். தேர்தல் முறைமை குறித்து அனைத்து அரசியல் கட்சிகளின் யோசனைகளும் கோரப்பட்டன. அந்த யோசனை கள் ஒவ்வொன்றும் முரண்பட் டதாக காணப்படுகிறது. ஆகவே மாகாணசபைதேர்தல்முறைமை தொடர்பில் இம்மாத காலத் திற்குள் ஒரு உறுதியான தீர்வை எடுக்க எதிர்பார்த்துள் ளோம் என இராஜாங்க அமை ச்சர் தெரிவித்தார். (நி-4)

# நாடு முழுமையாக முடக்கப்படாது
## மீண்டும் இராணுவத்தளபதி வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று பரவலைக் கட்டுப்ப டுத்தும் நோக்கில் 13 மாவட் டங்களில் 60க்கும் மேற்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரி வுகள் முடக்கப்பட்டுள்ளதாக கொரோனா வைரஸ் தடுப்புக் கான தேசிய செயற்பாட்டு மத் திய நிலையத்தின் தலைவர் இராணுவத்தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க கொழும்பு, நுவரெலியா, திருகோண மலை மாவட்டங்களிலும் பல பகுதிகள் நேற்று முன்தினம் முதல் முடக்கப் பட்டுள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

நாட்டை முழுமையாக முட க்கும் அவசியமில்லை என் பதை மீண்டும் வலியுறுத்தி யுள்ள இராணுவத் தளபதி, கொரோனா வைரஸ் பரவலை தடுக்கும் நடவடிக்கைகளுக்கு மக்களது பூரண ஒத்துழைப்பு அவசியம் என்றும் தெரிவித் தார்.

கொரோனா வைரஸ் பரவும் பிரதேசங்களில் தேவைக்கேற்ப தனிமைப்படுத்தலுக்கான முடக் கம் மேற்கொள்ளப்படும் என் றும், அதேவேளை சுகாதார வழி முறைகளை மீறி செயற் படு வோருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என் றும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கைகளில் சுகா தாரத் துறையினர், பாதுகாப்புத் துறையினர் உள்ளிட்ட அனை த்துத் தரப்பினரும் அர்ப்பணிப்பு டன் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், கடுமையான உழைப்பின் மூலம் விரைவில் கொரோனா வைரஸ் பாதிப்பி லிருந்து மீட்சி பெற முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாக வும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் உட னடியாக அமுலுக்கு வரும் வகையில் கொழும்பு மாவட் டத்தின் பிலியந்தல பொலிஸ் நிர்வாகப் பிரதேசம் தனிமைப் படுத்தலுக்காக முடக்கப்பட் டுள்ள நிலையில் திருகோண மலை மாவட்டத்தில் அன்புவ ழிபுரம் மற்றும் வோர்ஸ்கில் உள்ளிட்ட மூன்று கிராம உத் தியோகத்தர் பிரிவுகள் முடக் கப்பட்டுள்ளன.

அத்துடன் பாணந்துறை தெற்கு பிரதேசத்தில் வளான வடக்கு, வேகடவடக்கு, கிரி பேரிய மற்றும் மாளமுல்ல கிழ க்கு கிராம உத்தியோ கத்தர் பிரி வுகள் ஆகியன நேற்றுக் காலை முதல் முடக்கப்பட்டுள்ளன.

அதற்கு மேலதிகமாக நுவ ரெலியா மாவட்டத்தில் நீல தண்டாஹின்ன கிராம உத்தி யோகத்தர் பிரிவும் நேற்றைய தினம் தனிமைப்படுத்தலுக் காக முடக்கப்பட்டுள்ளதாக இரா ணுவத் தளபதி தெரிவித் தார். (நி-4)

# இரு ஆண்டுகளுக்கு தேவையான மருந்துகள் கையிருப்பில் உள்ளன
## தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை

(கொழும்பு)

இலங்கைக்குத் தேவை யான மருந்து பொருட்களில் அதிகளவானவை இந்தியா விலிருந்து கிடைக்கப் பெறு கின்ற நிலையில் இந்தியா கொவிட்-19 பரவல் காரண மாக பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது.

[illegible] இலங் கையில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடுகள் ஏற்படாதென அரச மருந்தாக்கல் கூட் டுத்தாபனம் தெரிவித்துள் ளது.

அத்துடன் எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்குத் தேவையான மருந்துகள் கையிருப்பில் உள்ளதாக வும் அந்தக் கூட்டுத்தாபனத் தின் தலைவர் வைத்திய நிபுணர் பிரசன்ன குண சேன தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து நாட் டுக்கு இறக்குமதி செய்ய முடியாத மருந்துகளை சீன நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் மருந்து பொருட்க ளுக்கான தட்டுப்பாடு ஏற்ப டாது எனவும் அரச மருந் தாக்கல் கூட்டுத்தாபனத் தின் தலைவர் வைத்திய நிபுணர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உண்மையைச் சொல்கிறேன்



இதைக்கேட்ட அனைவரும் வியப்படை ந்தனர். முதல் மந்திரி எழுந்து, "அரசே, தாங்கள் சொன்னபடி ஒரு செடி கூட வளர்க்கத் தெரியாத இந்த வாலிபனா எதிர்கால மன்னன்? மன்னருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து செடியைக் கண்ணும் கருத்துமாகப் பராமரிக்காமல் சோம்பேறித் தனமாக இருந்துவிட்டு, வெறும் பூந்தொட்டியைக் காட்டிய இவனா இந்த நாட்டு மன்னன்?" என்று கேட்டார்.

"அமைச்சரே, நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டீர்கள். இவன் அவனால் ஆகக் கூடிய முயற்சிகளை எல்லாம் செய்து பார்த்தான் என்பதை நான் நம்புகிறேன். ஏன் தெரியுமா? நான் பத்து இளைஞர்களுக்கும் செடி வளர்க்கக் கொடுத்த பத்து விதைகளும் நன்றாக வேக வைக்கப்பட்டு உலர்த்தப்பட்ட விதைகள்.

"அதில் எந்தச் செடியும் முளைக்காது. என்னிடமிருந்து பரிசுகளோ, பதவியோ பெறுவதற்காக மற்ற இளைஞர்கள் வேக வைக்கப் பட்ட விதைகளைத் தூக்கி எறிந்துவிட்டு, அதற்குப் பதிலாக அதே போன்ற நல்ல விதைகளை வாங்கிப் பயிரிட்டுச் செடிகளாக்கிக் கொண்டு வந்திருக்கின்றனர்.

"ஆனால் சாந்தனு அப்படிச் செய்யவில்லை. அரசகட்டளையை ஏற்று ஆறு மாத காலம் போராடிப் பார்த்திருக்கிறான். விதை முளைக்கவில்லை என்றதும், அதை உள்ளபடியே என்னிடம் அறிவிக்கக் காலித் தொட்டியுடன்வந்தான்.

"உண்மையைச்சொல்லும்போது என்னால் அவனுக்குத் தண்டனை ஏற்பட்டால் கூட அதைத் தாங்கச் சித்தமாயிருந்திருக்கிறான் என்பதை அவன் செயல், பார்வை, பேச்சு, வார்த்தை, நடத்தை மூலம் அறிந்து கொண்டேன்.

"இப்படி நேர்மையாக நடந்து கொண்டதன் மூலமாக அவனால் நிச்சயம் நாடு செழிக்கும்" என்றுதான் அவனை மன்னனாக அறிவித்தேன்.

மன்னரின் அறிவுக் கூர்மையை எண்ணி அனைவரும் வியந்து பாராட்டினர். அங்கிருந்த செடி வளர்த்த ஏனைய இளைஞர்கள் அரசனிடம் மன்னிப்புக் கோரினர். அரசனும் அவர்களை மன்னித்தார். (முற்றும்)

# மகாபாரதம்




துரியோதனன் தனக்குத் துணையாகப் பீஷ்மர், துரோணர்,கிருபர், துச்சாதனன், கர்ணன் ஆகியோரை அழைத்துக் கொண்டு பெரும் படையுடன்விராட நாட்டின் வடக்குப் பக்கம் இருந்த பசுக்களைக் கவர்ந்தான்.

அரண்மனையில்இருந்த அரசகுமாரன் உத்தரனுக்கு செய்தி போயிற்று.

"எனக்கு நல்ல சாரதி கிடைத்தால் அருச்சுனனைப் போல் போரிட்டு பகைவனை வெல்வேன்"என்றான்.

அதனைக்கேட்ட சைரந்தரி "பிருகன்னளை ஆடல் பாடலில் மட்டுமல்ல தேரோட்டுவதிலும் வல்லவள். இவளைச் சாரதியாகக் கொண்டு போருக்குப் போகலாம்" என்றாள்.

போருக்கு கிளம்பிய உத்தரன்கௌரவர்சேனையைக்கண்டு திகைத்தான். தேரினின்று குதித்து ஓடினான்.அவனை விரைந்து பிடித்த பிருகன்னளை அவனுக்கு ஊக்கம் பிறக்கும் வண்ணம் உரையாடினாள்.இதை துரோணர் கண்டார்.

"சாரதியாக இருப்பவள் பேடி அல்ல அருச்சுனன் என நினைக்கிறேன்" என்றார். கர்ணன் அதை மறுத்தான்.

பிருகன்னளை உத்தரனிடம் "நீ தேரை செலுத்து நான் போரிடுகிறேன்" என்றாள். உத்தரன் ஒப்புக் கொண்டான்.

மரத்தின் பொந்தில் ஒளித்து வைத்திருந்த ஆயுதங்கள் எடுத்து வரச் செய்தாள். காண்டீபம் என்னும் வில்லை உத்தரனுக்குக் காட்டினாள்.அது அருச்சுனனுடையது. அதனால் அவன் தேவாசுரர்களை வென்றான்.

முதன் முதலில் இவ்வில்லை பிரமதேவர் வைத்திருந்தார். பின் சிவபெருமான் வைத்திருந்தார், பின் சந்திரனிடம் இருந்தது.அதன் பின் வருணன் சில ஆண்டுகள் வைத்திருந்தார். அவரிடமிருந்து அக்கினி தேவன் கைக்கு வந்தது.

அக்கினிதேவன் அருச்சுனனுக்கு கொடுத்தான். மற்ற கருவிகளைப் பற்றியும் பிருகன்னளை உத்தரனுக்கு விளக்கினாள். அவை தருமர், பீமன், நகுலன், சகாதேவன் ஆகியோருக்கு உரியவை என்றாள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஹவுஸ்புல்' போர்ட் மாட்டிய இடுகாடு
## எரியாத உறுப்புகளை இழுத்துச் செல்லும் நாய்கள்
### நெஞ்சை உலுக்கும் காட்சிகள்

(டில்லி)

கர்நாடகாவில் நாளுக்கு நாள் கொரோனா மரணங்கள் அதிகரித்து வரும் நிலையில் பெங்களூரில் காம்ராஜ்பேட் இடுகாடு ஏதோ சினிமாத் தியேட்டர் போல் ஹவுஸ்புல் போர்டு மாட்டியுள்ளது, அங்குள்ள நிலைமைகளை வெட்டவெளிச்சமாக்குகிறது.

மேலும் அவசரமாக உருவாக்கப்பட்ட பல இடுகாடுகளில் உடல்களை சரியாக எரிக்க எரிபொருள் இல்லாததால் பாதி எரிந்தும் எரியாதுமான உடல் உறுப்புகளை நாய்கள் இழுத்துச் சென்று தெருவிலும் வீடுகளின் வாசல்களிலும் போட்டுவிட்டுச் செல்வதாக அங்கு குடியிருப்போர் புகார் எழுப்பியுள்ளனர்.


இந்நிலையில் கர்நாடகாவில் ஒட்சிசன் தட்டுப்பாட்டினால் காம்ராஜ்நகர் மாவட்ட மருத்துவமனையில் 2 மணி நேரத்தில் 24 நோயாளிகள் மரணமடைந்தது துயருக்கு மேல் துயரமாக நடந்து கொண்டிருப்பதை காட்டுகிறது.

கொரோனா மரணங்களை எதிர்கொள்ள பெங்களூரில் புதிதாக சுடுகாடுகளை ஏற்படுத்தினாலும் போதவில்லை.

கிடனஹல்லியில் கடந்த வெள்ளிக்கிழமையன்று ஒரே சமயத்தில் மொத்தமாக 24 உடல்கள் வைத்து எரிக்கப்பட்டுள்ளன. கடந்த வாரம் மின் தகன இடுகாடுகள் அதிக உடல்கள் வருகையினால் வரிசை கட்டி நிற்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

சில பேருக்கு தங்கள் உறவினர் உடலை எரித்து காரியம் செய்ய 10 மணி நேரம் காத்திருக்கின்றனர். இன்றும் கூட அதே நிலைமைதான் நீடிப்பதாக கூறப்படுகிறது.

சில இடுகாடுகளில் வரிசையாக 10 அம்புலன்ஸ்களில் உடல்களுடன் நிற்கின்றன. எரிபொருள்கள் பற்றாக்குறை வறட்டி, விறகுகள் பற்றாக்குறையினால் உடல்களை முழுதும் எரிக்க முடியவில்லை. குடும்ப உறுப்பினர் இருக்கும் வரை சுடுகாட்டு வெட்டியான் இருக்கிறார். அவர்கள் நகர்ந்த பிறகு பாதி எரிந்தும் எரியாத




உடல்களின் உறுப்புகளை நாய்கள் இழுத்துச்செல்லும் காட்சி நெஞ்சை உலுக்குவதாக இருக்கிறது. பெங்களூர் தாவனகெரே இடுகாட்டில் இந்தக் காட்சிகள் சகஜமாக நடக்கின்றன.

அப்பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு முன்னால் காலையில் எழுந்து பார்த்தால் பாதி எரிந்த உடல்களின் உறுப்புகள் சில கிடப்பதாக அங்குள்ளவர்கள் புகார் எழுப்பியுள்ளனர். (நி-4-8)

# தடுப்பூசி வழங்கிய நாட்டுக்கே
# கொரோனாத் தடுப்பூசி தட்டுப்பாடு

(டில்லி)

**மருந்து கொள்முதல் செய்வதற்கு புதிதாக மத்திய அரசு இதுவரை அனுமதி கொடுக்கவில்லை. தடுப்பூசிக்கான தட்டுப்பாடு இன்னும் 2 அல்லது 3 மாதங்களுக்கு நீடிக்கும் என சீரம் நிறுவனத்தின் அதிபர் ஆதர் பூனவல்லா தெரிவித்துள்ளார்.**

இந்தியாவில் தற்போது கோவிஷீல்ட், கொவெக்சின் ஆகிய தடுப்பூசி மருந்துகள் பயன்பாட்டில் உள்ளன. இதில் கோவிஷீல்ட் மருந்தை புனேவில் உள்ள சீரம் நிறுவனமும் கொவெக்சின் மருந்தை ஐதராபாத்தில் உள்ள பாரத்பயோடெக் நிறுவனமும் தயாரித்து வருகின்றன.

சீரம் நிறுவனத்திடம் இருந்து 10 கோடி டோஸ் மருந்துகளையும் பாரத் பயோடெக் நிறுவனத்திடம் இருந்து 2 கோடி டோஸ் மருந்துகளையும் மத்திய அரசு கொள்முதல் செய்ய அனுமதி கொடுத்து இருந்தது.

அந்த மருந்துகளை இரு நிறுவனங்களும் தயாரித்து வழங்கி வருகிறது. அனுமதி கொடுத்த மருந்துகளை இந்த மாதம் மத்தியில் சப்ளை செய்து முடித்துவிடுவோம் என்று மருந்து நிறுவனங்கள் கூறி உள்ளன.

மேலும் மருந்து கொள்முதல் செய்வதற்கு புதிதாக மத்திய அரசு இதுவரை அனுமதி கொடுக்கவில்லை.

ஏற்கனவே மத்திய அரசு பெற்ற மருந்துகளை ஒவ்வொரு மாநிலத்துக்கும் பகிர்ந்து கொடுத்தது. அந்த மருந்துகள் பல மாநிலங்களில் முடிந்துவிட்டன.

இந்த நிலையில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி போடும் திட்டம் கடந்த முதலாம் திகதி தொடங்கி இருக்கிறது. ஆனால் தடுப்பூசி போட மருந்து இல்லாததால் இந்தத் திட்டத்தை தொடங்கவில்லை. தற்போது பல மாநிலங்கள் தடுப்பூசி மருந்து இல்லாமல் மத்திய அரசின் உதவியை எதிர்பார்த்து காத்திருக்கின்றன. இந்த தட்டுப்பாடு இன்னும் 2 அல்லது 3 மாதம் கழித்தும் நீடிக்கும் என்று சீரம் நிறுவன அதிபர் ஆதர் பூனவல்லா கூறியிருக்கிறார். அவர் இதுபற்றி தெரிவித்ததாவது,

தற்போது எங்கள் நிறுவனத்தில் மாதத்துக்கு 6 கோடி முதல் 7 கோடி மருந்து வரை உற்பத்தி செய்து வருகிறோம். இதை 10 கோடியாக உயர்த்த திட்டமிட்டுள்ளோம். மருந்து வேண்டும் என்று எங்களுக்கு அதிக அனுமதிகள் வந்தால் தான் உற்பத்தியை உருவாக்கம் செய்ய முடியும். (நி-4-8)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-3,218,006**

**தொற்று :-153,565,239**

**(நேற்றைய நிலவரம்)**

## நிதி திரட்டும் பிரியங்கா சோப்ரா



(டில்லி)

பிரபல பொலிவுட் நடிகையான பிரியங்கா சோப்ரா கொரோனாத் தடுப்பூசிக்கு நிதி திரட்டும் பணியில் இறங்கி உள்ளார்.

கொரோனாவின் 2 ஆவது அலையை எதிர்த்துப் போராட பொலிவுட் நடிகர் அக்ஷய்குமார் ஒரு கோடி ரூபாயை கடந்த சில தினங்களுக்கு முன்பு வழங்கினார்.

இப்போது பொலிவுட் மற்றும் ஹோலிவுட் நடிகை பிரியங்கா சோப்ரா நிதி திரட்டும் பணியில் இறங்கி உள்ளார். கிவ் இந்தியா என்ற அமைப்புடன் இணைந்து இந்தப் பணியில் இறங்கி உள்ளார்.

நேற்று முன்தினம் ஒரே நாளில் ஒரு கோடி 85 இலட்சம் ரூபாய் நிதி குவிந்துள்ளது. இந்தப் பணம் பெங்களூர் மற்றும் மும்பைக்கு ஒட்சிசன் வாங்க பயன்படுத்தப்படும் என்று பிரியங்கா சோப்ரா குறிப்பிட்டிருக்கிறார். தொடர்ந்து நிதி குவிந்து வருகிறது. (நி-4-8)

## 7 ஆம் திகதி பதவியேற்பு?

(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றி உள்ளது. மு.க.ஸ்டாலின் ஆளுநர் மாளிகை சென்று ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தை சந்தித்து முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான கடிதத்தை வழங்குவர்.

அப்போது எந்தத் திகதியில் பதவி ஏற்பது என்ற விபரம் வெளியிடப்படும். அநேகமாக எதிர்வரும் 7 ஆம் திகதி மு.க.ஸ்டாலின் முதலமைச்சராக பதவி ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி-4-8)

## கோரத்தாண்டவம் ஆடும் கொரோனா

(டில்லி)

இந்தியாவில் கொரோனாப் பாதிப்பு நிலவரம் குறித்து மத்திய சுகாதார அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்தத் தகவலின்படி இந்தியாவில் நேற்று முன்தினம் 3 இலட்சத்து 68 ஆயிரத்து 147 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மொத்தப் பாதிப்பு ஒரு கோடி 99 இலட்சத்து 25 ஆயிரத்து 604 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் 3 ஆயிரத்து 417 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 18 ஆயிரத்து 959 ஆக உயர்ந்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு மருத்துவமனைகளில் 34 இலட்சத்து 13 ஆயிரத்து 642 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். நாடு முழுவதும் நேற்று முன்தினம் வரை 15 கோடியே 71 இலட்சத்து 98 ஆயிரத்து 207 நபர்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாவுக்குள் அரசியல் வேண்டாம்

# கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழையுங்கள்

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

**“நாட்டின் தேசிய அனர்த்தம் எனக் கருதி கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். அபாயகரமான இந்தச் சூழ்நிலையில் அரசியல் இலாபம் பெறும் வகையில் சிலர் செயற்படுவது பொருத்தமற்றது” என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.**

சிலர் அரசியல் பேதங்களை அடிப்படையாகக்கொண்டு புள்ளிகளைப் போட்டுக் கொள்ளும் வகையில் செயற்படுகின்றனரே அன்றி கொரோனாப் பரவலை கட்டுப்படுத்த உதவ வேண்டும் என்பது அவர்களின் உண்மையான நோக்கமல்ல என்பது தெளிவாகியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசு எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் சிலர் விமர்சித்து வருகின்றனர்.

இந்த விமர்சனங்களை ஒதுக்கி வைத்துவிட்டு, நாடு மற்றும் மக்களுக்காகக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுத்தால் அது முன்னுதாரணமாக அமையும்.

இப்படியான ஆபத்தான சந்தர்ப்பத்தில் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த இரவு, பகல் பாராது அர்ப்பணிப்புடன் செயற்படும் எமது மருத்துவர்கள், சுகாதார அதிகாரிகள், பாதுகாப்புப் படையினர், பொலிஸ் அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகளால் முன்னெடுக்கப்படும் சேவை அனைவருக்கும் முன்னுதாரணம்.

அதேபோல் மக்களும் சுகாதார ஆலோசனைகளைச் சரியான முறையில் பின்பற்ற வேண்டும். இது அரசியல் நோக்கங்களுக்காகச் செயற்படும் நேரமல்ல என அவர் தெரிவித்தார். (நி-4)

## அதிவேக நெடுஞ்சாலை வெளியேறும் இடம் மாற்றம்

(கொழும்பு)

மத்தளவிலிருந்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலை யினூடாக கொழும்புக்கு செல்லும் வாகனங்கள் கஹாதுடுவ வெளியேறும் இடத்தில் வெளியேற வேண்டும் என் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இது நடைமுறைக்கு வந்துள்ளது.

கொட்டாவ, அத்துருகிரிய, கொத்தலாவல மற்றும் கடுவலை வெளியேறும் இடங்களில் பணியமர்த்தப்பட்ட ஊழியர்கள் கொவிட்-19 தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண் டறியப்பட்டுள்ள நிலையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனவே மத்தளவிலிருந்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலையூடாக கட்டுநாயக்க நோக்கிச் செல்லும் அனைத்து வாகனங்களும் போக்குவரத்து கட்டணத்தை செலுத்தி விட்டு கஹாதுடுவ வெளியேறும் இடத்தில் வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-4)




முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 129 ஆவது ஜனன தின நிகழ்வு நேற்று மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2303

### அருண்

தவறுகள் மட்டும் தண்டனைக்குரிய குற்றம் அல்ல நேசிக்கும் மனதை அலட்சியம் செய்வதும் அலைக்கழிப்பதும் கூட தண்டனைக்குரிய குற்றம்தான்



### மணி

இன்று இருப்பது போல் மனிதர்கள் நாளை இருப்பதில்லை... ஒன்று பணத்தால், இன்னொன்று குணத்தால்



### விஜயன்

வியர்வைத் துளிகளும் கண்ணீர்த்துளிகளும் உப்பாக இருக்கலாம். ஆனால் அவைதான் வாழ்க்கையை இனிப்பாக மாற்றும்



### ராமு

அன்பின் பிரிவு! இறந்த பின் தான் தெரியும்



### கமல்




### அஸ்வின்

காலத்தின் கட்டாயம் ஒட்சிசன் உற்பத்திக்கு காரணமான மரங்களை நடாவிட்டாலும் பரவாயில்லை... இருப்பதை வெட்டாதீர்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றாளர்கள் தொடர்பில் 1906 இற்கு அறிவிக்கலாம்

(கொழும்பு)

கொவிட் -19 தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டு, சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல தாமதமாகும் பட்சத்தில், அது குறித்து அறிவிக்க புதிய தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.



அதன்படி, 1906 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, கொவிட் தொற்றாளர்கள் தொடர்பான அவசர தகவல்களை அறிவிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# துறைமுக நகர சட்டமூலம் நிறைவேற்ற அவசரம் ஏனோ?

## எதிர்க்கட்சி கேள்வி

(கொழும்பு)

நாட்டுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததும், சிக்கலுக்குரியதுமான கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலத்தை ஒரு நாள் விவாதத்தோடு துரிதமாக நிறைவேற்றிக்கொள்ள அரசாங்கம் ஏன் அவசரப்படுகிறது? தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் நிலைமையை தனக்கு தேவையான விடயங்களை மக்களுக்கு தெரியாமல் நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கம் முயற்சிக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

கொழும்பு - எதுல் கோட்டையில் அமைந்துள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இவ்வாரம் பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ளன. இதன் போது கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலம் தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளது.

எனினும் இந்த விவாதத்தை இவ்வளவு அவசரமாக நடத்த வேண்டாம் என்று அரசாங்கத்திடம் கோரினோம். ஒரே நாளில் இந்த விவாதத்தை நிறைவடைச்செய்ய வேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளோம்.

அத்தோடு குறித்த சட்ட மூலம் தொடர்பில் இதுவரையில் நீதி மன்றத்தினால் சபா நாயகருக்கு தெளிவுபடுத்தப்படவில்லை. 4 ஆம் திகதி நீதிமன்றத்தால் தெளிவுபடுத்தப்படும் என்று அரசாங்கம் கூறுகிறது. 5 ஆம் திகதி சட்ட மூலம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

நாட்டுக்கு முக்கியத்துவமுடையதும் சிக்கலுக்குரியதுமான இந்த சட்ட மூலம் ஏன் இவ்வளவு அவசரமாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த விவாத்திற்கு இரண்டு அல்லது மூன்று நாட்களேனும் ஒதுக்கப்பட வேண்டும். துறைமுக நகர அபிவிருத்தியை நிறுத்தும் எண்ணமோ எதிர்பார்ப்போ எதிரக்கட்சிக்கு கிடையாது.

எனவே இதனை வெற்றிகரமான அபிவிருத்தி திட்டமாக மாற்றுவதற்கு அது குறித்த சட்ட மூலத்திற்கு அதிகளவான காலத்தை ஒதுக்கி விவாதங்களில் ஈடுபட்டு ஜனநாயக ரீதியில் செயற்படுமாறு நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் நிலைமையை அரசாங்கம் தனக்கு தேவையான விடயங்களை நாட்டு மக்களுக்கு தெரியாமல் நிறை வேற்றிக் கொள்வதற்கு பயன்படுத்திக் கொள்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# கடல் வழியாக நுழையும் இந்தியர்கள்; அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தல்

(கொழும்பு)

இந்தியாவில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றில் இருந்து தப்பிக்கும் முகமாக இந்திய பிரஜைகள் கடல் வழியாக இலங்கைக்குள் பிரவேசிக்க முயற்சிப்ப தாக தகவல் கிடைத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தமிழ் நாடு, தூத்துக்குடி பகுதியில் இருந்து கடல் வழியாக இலங்கைக்குள் பிரவேசித்திருந்து, மறைந்திருந்த நிலையில் புத்தளம் மற்றும் நீர்கொழும்பு பகுதிகளில் வைத்து நால்வர் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே, கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர இத்தகவலை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய பிரஜைகள் நாட்டுக்குள் நுழைவதற்கு முயற்சிப்பது தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு தாம் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தேடுதல்

ஒரு அம்மா தெருவிலே உட்கார்ந்து எதனையோ தேடிக் கொண்டிருந்தார். அந்த அம்மா ஒரு சூஃபி ஞானி. பெயர் ரபியா அல் அடாவியா. அந்த அம்மாவுக்கு கண் கூட தெளிவாகத் தெரியாது. அந்தப் பக்கமாக வந்த சில பேர் இவர்களுக்கு உதவி செய்வதற்காக வந்தார்கள்.

" என்ன தேடிக் கொண்டிருக்கின்றீர்கள் " என்று கேட்டார்கள். இதற்கு அந்த அம்மா அந்தக் கேள்வி அவ்வளவு முக்கியத்துவம் இல்லை. நான் தேடிக் கொண்டிருக்கின்றேன். உங்களால் முடிந்தால் நீங்கள் உதவலாம் என்றார் கள்.

உதவி செய்ய வந்தவர்களுக்கு ஆச்சரியம். எதைத்தேடுகின்றோம் என்பது தெரியாமல் இப்படி ஏன் நேரத்தை செலவழிக்கின்றீர்கள்... நாங்கள் எப்படி உங்களுக்கு உதவ முடியும்... எங்களுக்கு ஒன்றும் புரியவில்லையே என்றார்கள். சரி உங்களைத் திருப்தி செய்வதற்காக சொல்கின்றேன். ஒரு குண்டூசி தொலைந்து போய்விட்டது.

அதைத் தேடுகின்றேன் என்றார் அந்த அம்மா. அதன் பின்பு இவர்களும் சேர்ந்து தேட ஆரம்பித்துவிட்டார்கள். சிறிது நேரம் ஆகிவிட்டது. ஒன்றும் கிடைக்கவில்லை. உதவி செய்ய வந்தவர்களும் அலுத்துப் போய்விட்டார்கள். அதன் பின்பு கேட்டார்கள்... இதோபாருங்கம்மா... இது மிகவும் பெரிய தெரு. அகலமான தெரு. அதனால் குறிப்பாக நீங்கள் எந்த இடத்தில் அந்த குண்டூசியைத் தொலைத்தீர்கள்? அதைச் சொல்ல முடியுமா ?என்றார்கள். இதற்கு அந்த அம்மா நீங்கள் மறுபடியும் அர்த்தமில்லாத கேள்வியைக் கேட்கின்றீர்கள். உங்கள் கேள்விக்கும் நான் தேடுவதற்கும் என்ன சம்பந்தம்? என்றார். இதைக் கேட்டதும் அவர்களுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

என்னம்மா நீங்கள் பைத்தியம் மாதிரிப் பேசுகிறீங்க என்றார்கள். சரி உங்களை மீண்டும் திருப்திப்படுத்துவதற்காக சொல்கின்றேன். அதை நான் என் வீட்டிலே தொலைத்துவிட்டேன் என்றார்.

அதன் பின் எதற்காக இங்கே வந்து தேடிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று கேட்டார்கள்.

ஏன் என்றால் இங்கே தான் வெளிச்சம் அதிகமாக இருக்கிறது. அங்கே வீட்டுக்குள்ளே இருட்டாக இருக்கின்றது அதனால் தான் இங்கே வந்து தேடுகின்றேன் என்றார்களாம் அந்த ஞானி.

இந்தக் கதைக்கு என்ன அர்த்தம் என்பதை ஓசோ என்ன சொல்கின்றார் தெரியுமா? இந்தத் தேடுதல் என்பது ஒரு வியாதி. அது நம்மை எப்பொழுதும் அலையவைக்கும். பைத்தியமாக மாற்ற முயற்சி செய்யும். ஒருக்காலும் அது நிறைவு அடையவே அடையாது.

வாழ்வு என்பது ஒரு புரிந்து கொள்ள முடியாத எப்பொழுதும் இயங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு செயல். அதற்கு ஆரம்பமும் இல்லை முடிவும் இல்லை.

எதையோ தேட வேண்டும் என்கிற உந்துதல் நமக்குள்ளே இருக்கும். ஆனால் குறிப்பாக எதைத் தேடிக் கொண்டிருக்கின்றோம் என்பது புரியாது.

அப்படி ஏதாவது ஒன்றைத்தேடி அடைந்து விட்டோம் என்று வைத்துக் கொள்வோம், உடனே ஒரு அதிருப்தி வந்துவிடும். அதனால் வாழ்க்கை என்பது சலிப்பு நிறைந்தது என்ற எண்ணத்தை உண்டாக்கிக் கொள்கின்றோம்.

ஒன்றை அடைந்த பின்பு வேறு ஒன்றை தேட ஆரம்பித்துவிடுகின்றோம்.

ஆக இந்தத் தேடல் என்பது நாம் ஒன்றை அடைந்தாலும் அடையாமல் விட்டாலும் தொடர்ந்து நடந்து கொண்டு தான் இருக்கின்றது.

இதற்கு முடிவே இல்லை. இந்த உண்மையை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்கின்றார் அவர்.

ஏழையும் தேடுகின்றான் பணக்காரனும் தேடுகின்றான், நோயாளியும் தேடுகின்றான் நோய் இல்லாதவனும் தேடுகின்றான், அதிகாரமுள்ளவனும் தேடுகின்றான் அதிகாரம் `இல்லாதவனும் தேடுகின்றான், முட்டாளும் தேடுகின்றான் அறிவாளியும் தேடுகின்றான் ஆனால் யாரும் இதைத்தான் தேடி சாதிக்கப் போகின்றோம், இது தான் முடிவு என்று திட்டவட்டமாக சொன்னதில்லை. ஒன்றை அடைந்ததும் மற்றொன்றைத் தேட ஆரம்பித்து விடுகின்றார்கள்.

உங்களைத் தேடுபவர் உங்கள் உள்ளே தான் இருக்கின்றார். அவரைத் தேடிக் கண்டு பிடியுங்கள். இது தான் ஞானிகள் நமக்குச் சொல்கின்ற ஆலோசனை. நம்முடைய ஆள் ஒருத்தன் ஜெயிலில் இருந்தான். இன்னொரு கைதி அவனைப் பார்த்துக் கேட்டான்... உன்னைப் பார்ப்பதற்கு வெளியே இருந்து யாருமே இங்கே வருவதில்லையே. உனக்கு சொந்தக்காரர்களே கிடையாதா? என்று கேட்டான். ஏன் இல்லை... எனக்குச் சொந்தக்காரர்கள் நிறைய பேர் உண்டு. அவர்கள் என்னைப் பார்ப்பதற்கு வராததற்கு காரணம் வேறு என்றான் இவன்.

என்ன காரணம் என்று கேட்டான் அவன். அதற்கு இவன், அதற்கு என்ன காரணம் என்றால் அவர்கள் எல்லோரும் உள்ளேயே இருக்கின்றார்கள் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 30 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்



திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

பல்கலைக்கழக மாணவர்களும் ஆய்வாளர்களும் இந் நூலகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

### வண்ணார்பண்ணை பொது நூலகக் கிளை

வண்ணார்பண்ணைப்பிரதேசத்தின் வாசகர்களினதும் கல்விமான்களினதும் தேவை கருதி இப்பிரதேசத்தில் நூலகம் ஒன்றை உருவாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதன் பயனாக 30.05.1985 இல் ஐயனார் கோவில் வீதியில் ஒரு தனியார் வீட்டில், இக்கிளை நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் இந்நூலகத்திற்கென நிரந்தரக் கட்டடம் ஒன்று வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மாள் ஆலய வீதியில் கட்டப்பெற்று, 21.07.1988 இல் திறந்து வைக்கப்பட்டதுடன் நூலக சேவைகளும் இங்கு விரிவாக்கப்பட்டன. இந் நூலகத்தை பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் தம் கல்வித் தேவைகளுக்காகப் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர். இங்கு 33,000 நூல்கள் உள்ளன.

### நாவாந்துறை கிளை நூலகம்

நாவாந்துறை மக்களின் நலன் கருதி யாழ்ப்பாண மாநகர சபையின் நூலசேவையின் ஒரு அங்கமாக நாவாந்துறை கிளை நூலகம் 1972 இல் அப்போதைய யாழ். மாநகர முதல்வர் அல்பிரட் தங்கராசா துரையப்பாவினால் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இது ஒரு படிப்பகமாக ஆரம்பிக்கப்பட்டு அங்கு அன்றாடம் தினசரி, சஞ்சிகைகள் இடப்பட்டன. இப்படிப்பகத்தை கே.பிரான்சிஸ் மேற்பார்வை செய்தார்.

அதன் பின்னர் ஏனைய கிளை நூலகங்கள் போன்று இப்படிப்பகம் இயங்க வேண்டுமென அவ்வூர் மக்கள் வேண்டிக் கொண்டதால், 01.07.2008 இல் புதிய மாடிக்கட்டடம் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவ்வேலைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டு நீண்டகாலத்தின் பின், 2016 ஆம் ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட கட்டட வேலைகள் முற்றுப்பெற்றபின் 30.07.2017 இல் யாழ்.மாநகர ஆணையாளராக இருந்த பொ.வாகீசனின் தலைமையில் முன்னாள் வட மாகாண முதல் அமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. இங்கு 2500 இற்கு மேற்பட்ட புத்தகங்களும் அதைவிட சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் உள்ளன. மேலும் இது சிறுவர் பகுதி, இரவல் வழங்கும் பகுதி மற்றும் பத்திரிகைப்பகுதிகளை உள்ளடக்கி இயங்கிக் கொண்டு இருக்கின்றது.



நாவாந்துறை கிளை நூலகம்

### யாழ்ப்பாண பொது நூலகத்திற்கு ஒரு நிரந்தர நூலகர் இல்லாமை

யாழ்ப்பாண பொது நூலகத்தில் 1987 வரை நூலகராக இருந்த திருமதி. ரூபவதி நடராசா இளைப்பாறிச் செல்ல அவரது பணிகளை திருமதி. மங்கையர்க்கரசி நித்தியானந்தன் சிறிது காலமும் (1988), பின்னர் செல்வி சுலோசனா இரகுநாதன் (1989) சிறிது காலமுமாகத் தொடர்ந்தனர். எனினும் ஒரு பொறுப்பு வாய்ந்த அபிவிருத்திப் பணியினை நீண்டகால நோக்கில் முன்னெடுத்துச் செல்லக்கூடிய ஒரு நிரந்தர நூலகரின் அவசியம் பற்றி மாநகர சபையின் புதிய ஆணையாளர் வே.பொ.பாலசிங்கம் தீவிரமாகச் சிந்தித்தார்.

இக்காலகட்டத்தில் விரிவுரையாளராகவும் தொழில்நுட்பக் கல்லூரி உப அதிபராகவும் இருந்து ஓய்வு பெற்ற முன்னாள் பிரதம நூலகர் கலாநிதி.வே.இ.பாக்கியநாதனை மீளவும் நியமனம் செய்ய நூலக ஆலோசனைக் குழு சிபாரிசு செய்தது. அதன் பிரகாரம் 1989 பிற்பகுதியில் பொறுப்புக்களை கலாநிதி பாக்கியநாதன் ஏற்று, நூலக அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் சென்றார்.

1990 ஏப்ரல் மாதத்துடன் கலாநிதி பாக்கிய[illegible] வெளிநாடு ப[illegible]களின் பொறுப்பினை மீண்டும் செல்வி சுலோசனா ரகுநாதன் ஏற்றுக்கொண்டார். ஆனால் அவ்வாண்டு ஜூன் மாதம் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையின் காரணமாக அவரும் 1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்துடன் பதவியைவிட்டு விலகி விட்டார்.

இதனால் சிறிது காலம் நூலகர் இல்லாத நிலையில் நூலக சேவை நடைபெற்றுக் கொண்டிருந்தது. யாழ். மாநகர ஆணையாளர் வே.பொ. பாலசிங்கம் நூலக சேவையை அபிவிருத்தி செய்வதற்கு பொறுப்பாளர் இல்லாமையை உணர்ந்து நல்லூர்க் கிளை நூலகப் பொறுப்பாளராக இருந்த ச.தனபாலசிங்கத்திடம் 1990 நவம்பர் மாதத்தில் பொறுப்புக்களை ஒப்படைத்து அபிவிருத்திக்கான வேலைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு பணித்தார்.

### நூலகங்களை தொடர்ந்து இயங்க வைக்கும் முயற்சி

அன்று முதல் தேங்கிக் கிடந்த நூல்களை எல்லாக் கிளை நூலகங்களுக்கும் பகிர்ந்து உடனுக்குடன் அனுப்பி வாசகர்களின் கைகளை எட்ட வழி செய்யப்பட்டது. புதிய நூல்களைத் தெரிவு செய்வதிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்து விடுதியில் தலைமை அலுவலகத்தைக் கொண்டு தொழிற்பட்ட நூலக சேவையை ஒன்றுபடுத்தும் முகமாக நல்லூர்க் கிளை நூலகத்திற்கு நூலக அலுவலகத்தை மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதனால் ஏற்பட்ட இடநெருக்கடியையும் வாசகர்களின் எண்ணிக்கை அதிகரிப்பையும் கருத்திற் கொண்டு நல்லூர் நூலகக் கட்டடத்தில் தொழிற்பட்ட மாநகரசபை [illegible] அப்புறப்படுத்தப்பட்டு [illegible]ம் நூலக சேவைக்கு ஒதுக்கப்பட்டது. 19.01.1992 இல் விரிவாக்கப்பட்ட உசாத்துணைப் பிரிவும் தனியான சிறுவர் பிரிவும் புதிய பகுதியில் திறக்கப்பட்டது.

யாழ்.மாநகர ஆணையாளர் பாலசிங்கத்தின் நூலக அபிவிருத்தி என்ற உத்வேகம் பாரிய முன்னெடுப்புகளுக்கு வழிசமைத்தது. புதிய நூலகம் ஒன்று எதிர்காலத்தில் புனரமைக்கப்படும் வரை இத்தலைமுறையினர் தம் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்ய காத்திருக்க வேண்டியதில்லையெனவும் இருக்கும் வளங்களைக் கொண்டு இத்தேவை இயன்றளவு பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்றும் அவர் கொண்ட சிந்தனையும், விரிவுபடுத்தப்பட்ட நூலக சேவையை உருவாக்க வழி அமைத்தது.

1992 இற்கும் 1995 இற்கும் இடைப்பட்ட போர்ச் சூழல் நிறைந்த காலத்தில் யாழ்.நகரில் நூல்களைக் கொள்வனவு செய்வது மிகவும் கடினமானதாயிருந்தது. ஆனால் மாநகர ஆணையாளர் பல முயற்சிகளை மேற்கொண்டு கொழும்பில் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நூல்களைக் கொள்வனவு செய்து யாழ்ப்பாணத்திற்கு மிகவும் சிரமத்தின் மத்தியில் கப்பல் மூலம் பல தடவைகள் அவற்றைக் கொண்டுவந்து சேர்த்தார். இதனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஈடாக யாழ்ப்பாணப் பொதுசன நூலகமும் தனது சேர்க்கையினை அபிவிருத்தி செய்யும் திறன் கொண்டிருந்தது. இக் காலகட்டத்தில் ஆசியா பவுண்டேஷன் நிறுவனம், பிரிட்டிஷ் கவுனசில் என்பன பல நல்ல புதிய நூல்களையும் வழங்கி உதவி செய்தன. இதனைவிட பழைய அரிய நூல்களையும் கொள்வனவு செய்து நூற்சேர்க்கை அபிவிருத்தி செய்யப்பட்டது.

நூலகத்தின் சேவையை அபிவிருத்தி செய்ய ஆலோசனைக் குழுக்களை அமைந்து மாநகர ஆணையாளர் பாலசிங்கம் காலத்திற்குக் காலம் கலந்தாலோசனை செய்து வந்தார். மாநகர சபையின் செயற்பாட்டில் நூலக சேவைக்கு முக்கியத்துவம் கொடுக் கப்பட்டு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் உடனுக்குடன் செயற்படுத்தப்பட்டன. இதனால் உயர்தர மாணவர்களிலிருந்து அறிஞர் வரை மாநகர நூலக சேவையின் எல்லாக் கிளைகளையும் பயன்படுத்தி கல்வியை அபி விருத்தி செய்யும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளை ஊக்குவித்ததாக ஏறாவூரில் ஒருவர் கைது

(கல்முனை)

விடுதலைப் புலிகளை ஊக்குவிக்கும் வகையில் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டதாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

ஏறாவூர் - செங்கலடி பகுதியைச் சேர்ந்த 56 வயதான வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரது சமூக வலைத்தளங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தியபோது இந்த விடயம் தெரியவந்துள்ளதாகவும் அவர் கைது செய்யப்பட்ட போது அவரிடம் இருந்து கையடக்கத் தொலைபேசி ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## நாடு திரும்பிய 48 பேருக்குத் தொற்று

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய மேலும் 48 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றைய ஒரேநாள் பாதிப்பு ஆயிரத்து 891 ஆகப் பதிவாகியுள்ளதுடன் இதுவே நாட்டில் அதிகூடிய ஒரேநாள் பாதிப்பாகும்.

இதன்படி இலங்கையில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 753 ஆக அதிகரித்துள்ளது. (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்

## விரதங்கள்

## முக்தி தரும் வைகுண்ட ஏகாதசி

(தொடர்ச்சி)


### விரதம் இருக்கும் முறை

ஏகாதசி விரதம் இருப்பவர்கள் ஏகாதசிக்கு முதல் நாள் தசமி அன்று பகலில் ஒருவேளை உணவு சாப்பிட வேண்டும். ஏகாதசியன்று அதிகாலை கண்விழித்துக் குளித்து விட்டு பூஜை செய்ய வேண்டும். ஒரு வாழை இலையில் நவதானியங்களை (எள் தவிர) பரப்பி அதன் மீது ஒரு கலசத்தை வைத்து பெருமாள் திரு உருவப்படத்தை வைத்து பூஜிக்க வேண்டும். துளசி, வாழைப்பழங்கள் நிவேதனம் செய்ய வேண்டும்.

பின்னர் பெருமாள் ஆலயங்களுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து சொர்க்கவாசல் வழியாக வரவேண்டும். அன்று முழுவதும் பால், பழம், பழச்சாறு உட்கொண்டு விரதம் கடைப்பிடிக்க வேண்டும். இரவு முழுவதும் கண்விழித்து இறைவனைப் பற்றிய சிந்தனையுடன் விஷ்ணு சகஸ்ரநாமம், திருப்பாவை பாடல்களை பாடலாம். பகவானின் திருநாமமான "நாராயணா!" என்ற நாமத்தைக் கூறிக்கொண்டு இருப்பது சிறந்த பலனைத் தரும். மறுநாள் துவாதசியன்று அதிகலை நீராடி பூஜைகளை முடித்து துளசி தீர்த்தம் அருந்தி விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். உப்பு, புளிப்பு முதலிய சுவையற்ற உணவாகச் சுண்டைக்காய், நெல்லிக்கனி, அகத்திக்கீரை ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

"கோவிந்தா!...கோவிந்தா!..." என்று மூன்று முறை கூறிய பின்பு உணவு உட்கொள்ள வேண்டும். அன்று பகல் உறங்கக் கூடாது. வைகுண்ட ஏகாதசி விரதம் இருப்பதால் கல்வி, உயர் பதவி, புத்திர பாக்கியம் கிடைக்கும். நம் விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறி சகல பாக்கியங்களும் வந்து சேரும். பாவம் விலகும். நோய் அகலும். சொர்க்கத்தில் இடம் கிடைக்கும் என்று புராணங்கள் எடுத்துரைக்கின்றன.

சொர்க்கவாசல் இல்லாத பெருமாள் கோவில்



வைகுண்ட ஏகாதசியன்று அனைத்துப் பெருமாள் கோவில்களிலும் சொர்க்கவாசல் திறக்கப்படும். விரதம் இருந்தவர்கள் அதன் வழியே செல்வர்.

108 திவ்ய தேசங்களில் ஒன்றான கும்பகோணம் சாரங்கபாணி கோவிலில் சொர்க்கவாசல் கிடையாது. இந்தக் கோவிலில் உள்ள மகாலட்சுமியை மண முடிக்க மகாவிஷ்ணு நேராக வைகுண்டத்தில் இருந்து தேரோடு இங்கு வந்ததாக ஐதீகம்.

இவரை வணங்கினாலே மோட்சம் கிட்டும். இக்கோவில் பூலோக வைகுண்டமாகத் திகழ்வதால் இங்கு வைகுண்ட ஏகாதசியன்று சொர்க்கவாசல் திறக்கப்படாது. இங்கு உத்திராயண, தட்சினாயண என 2 வாசல்கள் உள்ளன.

தை மாதம் முதல் ஆனி மாதம் வரை உத்திராயண வாசல் திறந்து இருக்கும். பின்னர் அது மூடப்படும். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை தட்சிணாயண வாசல் திறந்து இருக்கும். அதன் வழியாகச் சென்று பெருமாளைத் தரிசித்தால் மோட்சம் கிடைக்கும் என்பது ஐதீகம். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## கடல் மார்க்கமாக நாட்டிற்குள் நுழைந்த இன்னொரு பெண்

(கொழும்பு)

இந்தியாவின் தூத்துக்குடி பகுதியில் இருந்து கடல் மார்க்கமாக நாட்டுக்குள் பிரவேசித்த மற்றுமொரு பெண், நீர்கொழும்பு - கொச்சிக்கடை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். அவர் இந்தியாவில் இருந்து நாட்டுக்குள் பிரவேசித்த நிலையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட பெண் சிறுவர்களுடன் நாட்டுக்கு வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

34 வயதான குறித்த பெண்ணுடன் 13 மற்றும் 4 வயது களை உடைய இரண்டு சிறுவர்களும் புத்தளம் - வேப்பமடு பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் அவர்கள் தற்போது கொவிட்-19 பரிசோதனைகளுக்காக புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-4)

## விற்பனை நிலையங்களை மூடுங்கள்

### ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

(திருமலை)

திருகோணமலையில் அத்தியாவசிய பொருட்கள் விற்பனை தவிர்ந்த ஏனைய விற்பனை நிலையங்களை மூடுமாறு நகர சபை ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. இவ் வறிவுறுத்தலை திருகோணமலை நகரசபை நேற்று முன்தினம் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளது.

தற்பொழுது திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா தொற்று அதிகரித்து வருவதால் வெளியூரிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அதிகளவிலான மக்கள் வருகை தருவதாகவும் இதனூடாக தொற்று அதிகரித்துள்ளமையினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது. (நி-4)

## சுகாதார விதிமுறை மீறல்;215 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 215 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒக்டோபர் 31 முதல் இதுவரையான காலப் பகுதியில் குறித்த குற்றச்சாட்டுக்காக 4,857 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 150 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 100 | 120 |
| தக்காளி | 120 | 120 | 100 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 60 | 50 |
| கோவா | 100 | 120 | 120 | 120 |
| கரட் | 120 | 200 | 160 | 240 |
| பூசணி | 40 | 50 | 60 | 50 |
| புடோல் | 100 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 280 | 280 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 180 | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 130 | 140 | 160 |
| பயற்றங்காய் | 100 | 120 | 70 | 80 |
| லீக்ஸ் | 100 | 130 | 120 | 140 |
| பீற்றூட் | 100 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 100 | 80 | 140 | 120 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 500 | 600 |
| போஞ்சி | 140 | 200 | 140 | 240 |
| கத்தரிதம்புள்ள | 140 | 120 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 60 | 40 | 50 |
| தேசிக்காய் | 120 | 100 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 60 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 180 | 250 |
| வெங்காயப்பூ | --- | --- | 120 | 280 |
| முள்ளங்கி | 80 | 40 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 60 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | --- | 120 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பி.சி.ஆர்.பரிசோதனையும் தொற்று நீக்கலும்

(நெளுக்குளம்)

வவுனியா குருக்கள் புதுக் குளம் பகுதியைச் சேர்ந்த 100 பேரிடம் நேற்று பி.சி. ஆர்.பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் பல்வேறு பகுதிகளிலும் பி.சி.ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் குருக்கள் புதுக்குளம் பகுதியில் கடந்த இரு தினங்களிற்கு முன்பாக இரண்டு பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

அக்கிராமத்தில் இடம் பெற்ற சில நிகழ்வுகளில் அவர்கள் கலந்து கொண்டுள்ளனர். அதனையடுத்து குறித்த இருவருடனும் தொடர்புகளைப் பேணிய 100 பேருக்கு நேற்று பி.சி. ஆர்.பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டுள்ளன, கிராமத்தில் தொற்று நீக்கல் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (5-4-299)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வளர்மதி சனசமூக நிலையமும் அதன் உப அமைப்புக்களும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இரத்ததான நிகழ்வு நாளை புதன் கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மேற்படி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் சுகாதார முறைகளைப் பின்பற்றி கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-18)



நாடளாவிய ரீதியில் கொரோனாத் தொற்று அதிகரித்து வருகின்ற நிலையில் கொரோனாப் பரவலை தடுக்கும் முகமாக மன்னார் மாவட்டத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத பொதுமக்கள் மற்றும் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு எதிராக பொலிஸாரினால் கடும் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றனர். (படம்:- ஜோசப் நயன்)


## துரவு கிணற்றுக்குள் விழுந்த யானைகள் மீட்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட செம்மலை புளியமுனை கிராமத்தில் பாழடைந்த துரவு கிணறு ஒன்றுக்குள் இரு யானைகள் வீழ்ந்து வெளியில் வரமுடியாது தவித்தன.

இந்நிலையில் கிராம உத்தியோகத்தர் மற்றும் கிராம மக்களின் கடும் முயற்சியினால் யானைகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டுவனப் பகுதிக்கு அனுப்பப்பட்டன.

செம்மலையின் புளியமுனைப் பகுதியில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்ட பாழடைந்த துரவுக் கிணறு ஒன்றிலேயே குறித்த யானைகள் விழுந்து சகதிக் குள் சிக்கின.



சம்பவம் தொடர்பில் வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் அவர்கள் குறித்த பகுதிக்கு வருகை தர முன்னர் குறித்த பகுதி கிராம உத்தியோகத்தர் மற்றும் மக்கள், இளைஞர்கள் இணைந்து குறித்த யானைகள் வெளியேறக் கூடிய வகையில் துரவு கிணற்றினை வெட்டிவிட்டு யானைகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு வனப்பகுதிக்கு அனுப்பப்பட்டன.

குறித்த கிராமத்தில் தொடர்ச்சியாக மக்களது விவசாய நடவடிக்கைகளுக்கு அழிவுகளை ஏற்படுத்தும் யானைகளே இவ்வாறு கிணற்றில் வீழ்ந்த நிலையில் மீட்கப்பட்டன. (5-4-281)

## இழப்பீடு வழங்கப்பட்டது



(சாவகச்சேரி)

மாங்குளம் பகுதியில் கடந்த டிசெம்பர் மாதம் காட்டு யானை தாக்கி உயிரிழந்த கொடிகாமம் மத்தியைச் சேர்ந்த விஜயந்தனின் குடும்பத்திற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வைத்து உதவி பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்டது. (5-4-29)

## மேலும் 967 பேர் குணமடைவு

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 967 பேர் நேற்று பூரணமாக குணமடைந்து வீடு திரும்பினர்.

இதற்கமைய நாட்டில் இது வரை கொரோனா தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 98 ஆயிரத்து 209 ஆக அதிகரித்துள்ளது. (5-4)

## இங்கிலாந்தில் தெற்காசியாவை சேர்ந்தவர்களுக்கு அதிக பாதிப்பு

(லண்டன்)

இங்கிலாந்தில் கொரோனா வைரஸின் முதல் அலையை விட இரண்டாவது அலையில் தெற்காசிய நாடுகளை சேர்ந்தவர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்பட்டதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.


இது தொடர்பாக லண்டன் ஸ்கூல் ஒப் ஹைஜீன் மற்றும் டிராபிக்கல் மெடிசன் ஆய்வுகளை மேற்கொண்டன.

மொத்தம் 1.7 கோடி பேரிடம் எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் அதன் முடிவுகள் வெளிவந்துள்ளன. அனைத்து இனத்தவர்களிடமும் இருந்து சுகாதார நிலைமைகள், சமூக காரணிகள் உள்ளிட்ட ஏராளமான தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இதில், தெற்காசியாவை சேர்ந்தவர்களுக்கு அதிகமான பாதிப்பு ஏற்பட்டது. கொரோனா தொற்றுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதிலும், தீவிர சிகிச்சை பிரிவில் சேர்ப்பதிலும் மற்றும் உயிரிழப்பிலும் தெற்காசியாவை சேர்ந்தவர்களே அதிகளவில் காணப்பட்டனர். (5-4)

## போதைப்பொருட்களுடன் நால்வர் கைது

(கல்முனை)



கல்முனை பொலிஸ் பிரிவிலுள்ள சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருள் வியாபாரி ஒருவர் உட்பட ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் 4 பேரை நேற்று திங்கட்கிழமை கைது செய்துள்ளதுடன் அவர்களிடமிருந்து ஹெரோயின், ஐஸ் போதைப்பொருள், கஞ்சா என்பன மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் கைது செய்தவர்கள் 20 தொடக்கம் 25 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-4)

## அலுவலகங்களிற்கு வருவோர் மட்டுப்படுத்தப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

தொழில் திணைக்களத்தின் பிரதான மற்றும் மாகாண அலுவலகங்களுக்கான மக்கள் வருகை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஊழியர் சேமலாப நிதியை (EPF) பெற்றுக் கொள்வதற்காக தலைமை அலுவலகத்திற்கு வருகை தருவோர் labourdept.gov.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசித்து தமக்கான நேரம் மற்றும் திகதியை முன்கூட்டியே ஒதுக்கிக் கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வாழ்க்கையில் ஏதாவது அதிசயம் நிகழ்த்த வேண்டும் என்று நினைத்தேன். அது இவ்வளவு சீக்கிரம் நடந்து விட்டது. ~அம்பானி டாரிகே*

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

# தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு ஈழத்தில் இருந்து ஒரு மடல்

தமிழகத்தின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மு.க.ஸ்டாலினுக்கு அன்பு வணக்கம்.

தமிழக சட்ட சபைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றியடைந்து தமிழகத்தின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் தங்களுக்கு ஈழத் தமிழ் மக்களின் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

கலைஞர் மு.கருணாநிதி, ஈழத்தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தவர். தமிழ் இனத்தின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்.

2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழின அழிப்பு நடந்தபோது, தமிழகத்தின் முதலமைச்சர் பதவியில் இருந்தவர் கலைஞர்.

அதற்கு மேலாக, மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் கட்சியின் பக்கபலமாக திராவிட முன்னேற்றக் கழகமே இருந்தது.

ஆயினும் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் வன்னிப் போரின்போது இலங்கை அரசுக்கு ஆதரவும் ஆயுதமும் வழங்கினர்.

போரில் சிக்குண்ட ஈழத்தமிழ் மக்கள்; எங்களைக் காப்பாற்றுங்கள் என்று இரு கைகளையும் நீட்டி இந்தியாவிடம் கெஞ்சிய போதிலும் தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்கு பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான சோனியா காந்தியின் காங்கிரஸ் அரசு முன்வரவில்லை.

இதனால் செத்து மடிந்தவர்கள் பல்லாயிரம். காணாமல்போனவர்கள் ஏராளம்.

இன்றுவரை அந்த இழப்புகளின் வலிகளை எம் ஈழத் தமிழ் மக்கள் தங்கள் இதயங்களில் சுமந்து நிற்கின்றனர்.

இச்செய்தி தாங்கள் அறியாததல்ல. இருந்தும் இதற்குள் இருக்கக்கூடிய ஓர் உண்மை, அன்றைய தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களும் ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுகின்ற மனநிலையில் இருந்திருக்கவில்லை என்பதுதான்.

யுத்தத்தை நிறுத்தும்படியாக உண்ணாவிரதம் என்ற நாடகத்தை கலைஞர் அரங்கேற்றியிருந்தாலும் அந்த நாடகத்தின் போலித்தனம் மிகுந்திருந்ததால், நாடகம் அரங்கேற்றத்தின் நடுவிலேயே பிசுபிசுத்துப் போனது.

இதற்கு மேலாக அன்றைய மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு தலைமையில் விசேட குழுவொன்று இலங்கைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தந்திருந்தாலும் அதுவும் கலைஞர் தயாரித்த போலி நாடகத்தின் ஓர் அங்கம் என்பதும் அம்பலமாயிற்று.

இந்நிகழ்வுகள் ஈழத் தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் வேதனையைத் தந்தன என்பதை இவ்வேளையில் தங்களுக்கு தெரியப்படுத்துவது பொருத்துடையது எனக் கருதியதால் அவற்றை முன்வைத்தோம்.

இன்று கலைஞர் நம்மிடையே இல்லை. ஆனால் அவருடைய மகனாகிய தாங்கள் தமிழகத்தின் முதலமைச்சராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள்.

உங்களின் ஆட்சியில் ஈழத் தமிழர்களுக்கான ஆதரவும் ஒத்துழைப்பும் நிச்சயம் கிடைக்கும் என நம்புகின்றோம்.

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தில் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைத்தழிக்கப்பட்ட போது அதனை நீங்கள் வன்மையாகக் கண்டித்தீர்கள்.

உங்களின் அந்த இனப்பற்றுதல் எங்களுக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது. தொடர்ந்தும் எங்களுக்கான உங்களின் குரல் ஓங்கி ஒலிக்கட்டும். நீங்கள் தமிழகத்தின் முதல்வராக இருந்த காலத்தில், ஈழத் தமிழர்கள் உரிமை பெற்றனர் என்று வரலாறு எழுதட்டும். வாழ்த்துக்கள். ஏற்றிடுக.

# கொரோனா தொற்றாளர்களால் நிரம்பி வழியும் வைத்தியசாலை

## படுக்கைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையின் காரணமாக வைத்தியசாலைகள் அனைத்தும் கோவிட் வைரஸ் தொற்றாளர்களால் நிரம்பியுள்ளதால் வைத்தியசாலையின் படுக்கைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

தற்போது வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்தை கடந்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தின் முதலாம் திகதி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்ற கோவிட் நோயாளர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து 731 ஆக பதிவாகியிருந்தது.

எனினும், ஏப்ரல் மாதத்தின் ஆரம்பம் முதல் மே மாதத்தின் ஆரம்பம் வரையான குறுகிய காலப் பகுதியில் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக வைத்தியசாலைகளில் உள்ள விடுதிகளுக்கும் படுக்கைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

# பொலிஸார் என பாசாங்கு செய்து 30 பவுண் நகை கொள்ளை

## வவுனியாவில் இரு வேறு இடங்களில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவின் இரு வேறு பகுதிகளில் பொலிஸார் என தெரிவித்து 30 பவுண் நகை கொள்ளையிடப்பட்டுள்ளது.

நேற்றையதினம், வவுனியாநகர் மற்றும் தேக்கவத்தை பகுதிகளில் உள்ள வீடுகளிற்கு சென்ற இனந் தெரியாத நபர்கள் தங்களை பொலிஸார் என கூறியுள்ளனர்.

பின்னர் வீட்டில் சோதனை செய்வது போல பாசாங்கு செய்துவிட்டு இரு வீடுகளில் இருந்தும் 30 பவுண் தங்க ஆபரணங்களை களவாடிக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(ம-299)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 05 ஆம் திகதிபுதன்கிழமை காலை 9 மணியிலிருந்து 12.30 மணிவரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** முகாமைத்துவ பயிற்சி மையம் கனகபுரம், உருத்திரபுரம் பல நோக்கு கூட்டுறவு சபை அரிசி ஆலை, அம்பாள்குளம், ஜெயந்தி நகர், சிவநகர், உருத்திரபுரம்- கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, உருத்திரபுரம் கிழக்கு இந்து கல்லூரி, கனகபுரம் அப்பன் மோட்டார்ஸ் நிலையத்தடி (கனகபுரம்) கோப்சிற்றியா (கனகபுரம்), காந்தி கிராமம், கோணா வில், புதுமுறிப்பு, செல்வாநகர், சிவன்சோலை, சோலை நகர் முறிப்பு, யூனியன் குளம், ஊற்றுப்புலம் ஆகிய இடங்களிலும்

காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** வீரபுரம், அறவந்துலாவ, பாரதிபுரம், எல்லப்பர் மருதங்குளம், மறக்காறம்பளை-கணேசபுரம், சமணங்குளம். சமயபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

# கிளிநொச்சியில் அதிகளவான போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அதிகளவான போலி நாணயத்தாள்களுடன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் விசேட பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைவாக மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது, எட்டு இலட்சத்து பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்கள் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளன.

நாணயத் தாள்களை சந்தேகத்திற்கிடமான வகையில் பையில் எடுத்துச்செல்லப்படுகின்றமை தொடர்பாக பொலிஸ் விசேட பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து, பொலிஸ் விசேட பிரிவினரால் பொலிசாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில், போலி நர்ணயத்தாள்களுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட, சந்தேகநபர் கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டுள்ளனர். (ம-100)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## இனிமையான சொர்க்கம்

❖ மனித இதயத்தின் ஆழப் பகுதியிலும், அணுவிற்குள்ளும் ஆதி அந்தம் இல்லா இறைவன் தன்னை ஒளித்துக் கொண்டிருக்கிறான். அவனை உணர்ந்தவனே உண்மையை உணர்ந்தவன்.

❖ வாழ்வில் ஏற்படும் தவறுகளை பெறும்பேறாக நினையுங்கள். அவை நம்மை அறியாமலேயே நமக்கு வழிகாட்டும் தெய்வங்களாகும்.

❖ கருணை என்பது இனிமையான சொர்க்கம். நாம் அனைவரும் வாழ்வில் கருணை நிறைந்தவர்களாக மாறினால், இங்கேயே சொர்க்க வாழ்வை அனுபவிக்கலாம்.

❖ தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன்னைத்தவிர வேறு யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.


❖ தெய்வீகம் எப்போதும் மனிதனிடம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அதைத் தட்டி எழுப்புங்கள். நன்மை செய்யும் மனநிலையைப் பெறுங்கள்.

❖ வாழ்க்கையில் நீங்கள் எதை செய்தாலும், அது இறைவழிபாட்டுக்கு சமமானதாக இருக்கட்டும்.

❖ தன்னம்பிக்கையை இழப்பது தெய்வ நம்பிக்கையை இழப்பதற்குச் சமம். உறுதியுடன் எதையும் செய்யுங்கள். வெற்றிக்கனி உங்களுக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசிற்கு வழங்கும் அழுத்தங்களே தமிழர் பிரச்சினை தீர உறுதுணையாக அமையும்



(யாழ்ப்பாணம்)

இந்திய நடுவண் அரசுக்கு நீங்கள் வழங்கக்கூடிய அழுத்தங்கள் இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க உறுதுணையாக அமையுமென நம்புகிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலினுக்கு வாழ்த்துத் தெரிவித்து நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று, ஆறாவது தடவையாகவும் திராவிட முன்னேற்றக் கழகம் அதன் கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைத்திட அறிவுபூர்வாக செயற்பட்டு அடித்தளமிட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான தங்களுக்கு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சார்பில் மனமார்ந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தொடர்பாக, மாபெரும் திராவிட இயக்கத்தின் தலைவராகவும் தமிழகத்தின் முதற்குடிமகனாகவும் இந்திய நடுவண் அரசுக்கு நீங்கள் வழங்கக்கூடிய நியாயபூர்வமான அழுத்தங்கள் இலங்கையில் தமிழ் மக்களுக்கு மிக அவசியமான தேவையாக இருப்பது மாத்திரமல்ல தமிழ் மக்களுடைய அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவ் அழுத்தங்கள் உறுதுணையாக அமையுமெனவும் நம்புகின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-4)



# ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்த சுமந்திரன்



(யாழ்ப்பாணம்)


தமிழ்நாடு சட்ட சபைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய தி.மு.கவிற்கும் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும் எமது மனம் நிறைந்த வாழ்த்துக்கள் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (நி-4)

# எமது நாட்டுப் பிரச்சினை தீர உங்கள் பங்களிப்பு அவசியம்

(யாழ்ப்பாணம்)

தி.மு.க.ஆட்சியில் 10 ஆண்டுகளின் பின் மீண்டும் உதயசூரியன் உதித்தமை தமிழ் பேசும் நல்லுலகில் மக்கள் அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியை தந்துள்ளது என தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார். தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. அமோக வெற்றி பெற்றதற்கு வாழ்த்துத் தெரிவித்து நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

எமது நாட்டுப்பிரச்சினை தீர உங்களின் பங்களிப்பு மிக முக்கியமானது மட்டுமல்ல அவசியமானதும்.



இலங்கை வாழ் தமிழ் மக்களின் சார்பில் எமது மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவிக்கின்றேன். உங்கள் பணி நீண்ட காலம் தொடர வேண்டும் என ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய தமிழக ஆதரவு மிகவும் முக்கியமானது


(யாழ்ப்பாணம்)

தமிழக சட்டமன்ற தேர்தல்கள் முடிவுகளின் படி தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணி அமோக வெற்றியீட்டி ஆட்சியமைக்கவுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஆட்சிபீடம் ஏறவுள்ள திராவிட முன்னேற்றக் கழக த்தை வாழ்த்தியுள்ளதுடன் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை நிரந்தரமாகத் தீர்க்கப்படுவதற்கு தனது ஆதரவினை நல்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ளார்.

இது குறித்து நேற்று அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

யுத்தம் முடிந்து பன்னிரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், ஈழத் தமிழர்களுக்கு உரிமையும் கிடைக்கவில்லை நீதியும் கிடைக்கவில்லை. இப்பொழுது பதவியில் இருக்கின்ற இலங்கை அரசாங்கமானது, தமிழ் மக்களின் காணிகளை மூர்க்கத்தனமாகப் பறித்தெடுப்பதிலும்



அவர்களது வாழ்விடங்களைக் கபளீகரம் செய்வதிலும் அவர்களது இருப்பைக் கேள்விக்குள்ளாக்கக்கூடிய வகையில் செயற்பட்டு வருகின்றது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், ஈழத் தமிழ் மக்களது இருப்பை, பாது காப்பை உத்தரவாதப்படுத்த தமிழகத்து ஆதரவென்பது மிகமிக முக்கியமானது.

அந்த ஆதரவு எப்பொழுதும் எமக்குக் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

இவை மாத்திரமல்லாமல், இலங்கை என்பது முற்று முழுதாக சீனாவின் ஆதிக்கத்திற்குள் சென்றிருக்கக்கூடிய சூழ்நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தின் பல தீவுகளைக் கூட சீனக் கம்பனிகளுக்கு மாற்று மின்சாரத் திட்டங்களை மேற்கொள்வதற்காக இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளது. இலங்கையின் வடபகுதி ஈழத் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசமாகும்.

இப்பகுதியில் சீன ஆதிக்கம் என்பது ஈழத் தமிழர்களுக்கு மட்டுமன்றி தமிழகத்தின் பாதுகாப்பிற்கும் பாரிய அச்சுறுத்தலாகும். ஈழத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான ஒரு முழுமையான தீர்வே இவ்வாறான அச்சுறுத்தல்களிலிருந்து விடுபட உதவிக்கரமாக இருக்கும்.

கொழும்பு அரசாங்கமானது இம்மாகாணங்களின் வளர்ச்சிக்கு எத்தகைய முயற்சிகளையும் மேற்கொள்ளாமல் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே செயற்படுகின்றது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில், தமிழகத்து தொழில் முனைவோரை இயன்றவரை இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் முதலீடுகள் செய்ய ஊக்குவிக்குமாறும் கோருவதுடன் மீண்டும் உங்களை வாழ்த்தி நிற்கின்றேன் என அவர் தெரிவித்தார். (நி-4)

# தொப்புள்கொடி உறவாய் தோள் கொடுப்பீர்கள் என நம்புகின்றோம்

(யாழ்ப்பாணம்)

தமிழக சட்ட மன்றத் தேர்தலில் தங்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் அமோக வெற்றி பெற்றதையிட்டும், தமிழகத்தின் அடுத்த முதலமைச்சராக தாங்கள் பதவியேற்கவுள்ளதையிட்டும் புளகாங்கிதம் அடையும் அதே வேளை ஈழத்தமிழர்கள் சார்பில் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

மு.க.ஸ்டாலினை வாழ்த்தி ஊடகங்களுக்கு நேற்று அனுப்பிய செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவித்தார்.

எப்பொழுதெல்லாம் தமிழர்கள் மீது சிங்கள பேரினவாத அரசால் அடக்குமுறைகளும், இனவன்முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டனவோ அப்பொழுதெல்லாம் சிங்கள வல்லாதிக்கத்திற்கெதிராக தி.மு.க பிரயோகித்த அழுத்தங்களும், மேற்கொண்ட எதிர் நடவடிக்கைகளுமே எமது மக்களைக் காக்கும் கவசங்களாகவும், அவர்களின் மனங்களை ஆற்றுப்படுத்தும் அருமருந்தாகவும் இருந்திருக்கிறது.



கலைஞரின் மகனாய், அவரது அரசியல் வாரிசாய் அதே கொள்கையோடும், இலட்சியத்தோடும் ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் தாங்களும் தந்தையின் வழி என்றென்றைக்கும் எமது தொப்புள்கொடி உறவாய் தோள் கொடுப்பீர்கள் என்ற பெரும் திடத்தோடு, உங்களின் வெற்றிக்கான வாழ்த்துக்களைக் கூறும் அதேவேளை தங்கள் ஆட்சியும், பணியும் சிறக்க இறை ஆசிகளையும் வேண்டி நிற்கிறேன் என தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IPL...

கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

ஐபிஎல் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் மோத இருந்தன.

இந்த நிலையில், கொல்கத்தா அணியில் விளையாடும் தமிழக வீரரான வருண் சக்ரவர்த்தி மற்றும் கேரளாவை சேர்ந்த சந்தீப் வாரியர் ஆகியோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பெங்களூர் ராயல் சலஞ்சர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## நீதிமன்றங்கள்...

வாரத்துக்கு மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை எதிர்வரும் 7ஆம் திகதி வரை திறந்த நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளாமல் இருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம)

## 13 பேர்...

களம் குறித்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

இதனால் இலங்கையில் இதுவரையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 709 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## காரைநகர்...

கொரோனா அச்சம் காரணமாக முடக்கப்பட்டுள்ளது.

காரைநகர் கசூரினா கடற்கரையில் நேற்று முன்தினம் நூற்றுக்கணக்கான வர்கள் ஒன்றுகூடியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

அவர்கள் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் சுகாதார நடைமுறைகளை அவர்கள் கைக்கொள்ளாமையினால் காரைநகர் கசூரினா கடற்கரைக்கு மக்கள் செல்வதற்கு சுகாதாரத் தரப்பினரால் நேற்று தடை விதிக்கப்பட்டது. (ம)

## இறுக்கமான கட்...

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் துணை பொதுச் செயலாளர், வைத்திய கலாநிதி நவீன் டி சொய்சா இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில்,

அதிசயங்களை நிகழ்த்தி கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்த முடியாது. தீவிரமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது கட்டாயமாகும்.

இனியும் தாமதித்தால் முழு நாட்டையும் முடக்க வேண்டி ஏற்படும். உரிய அதிகாரிகள் சிறப்பாகச் செயற்பட்டால் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவது இன்னும் சாத்தியமான நிலையிலேயே உள்ளது. தாமதித்தால் நிலைமை கைமீறும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## வியாபாரிகள்...

9 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் ஒருவருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருவருக்கும்,

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவருக்கும், மன்னார் மாவட்டத்தில் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-18,33)

## யாழில் வெவ்...

நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் கூறினர்.

சந்தேகநபரிடமிருந்து 35 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார்.

அதேவேளை யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை கடற்பரப்பில் மிதந்து வந்த 183 கிலோ கிராம் கேரள கஞ்சா கடற்படையினரால் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமான பொதிகள் கடலில் மிதந்து வந்தவேளை அதனை கடற்படையினர் சோதனையிட்டபோது அதில் 183 கிலோ கிராம் கேரளா கஞ்சா பொதிகள் காணப்பட்டுள்ளது. (ம-33,60)

## மூன்று...

முதியவர்கள் அதன் இரண்டாம் கட்ட தடுப்பூசியை பரிந்துரைக்கப்பட்ட காலத்திலேயே ஏற்றிக் கொள்ள வேண்டும் என ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக் கழக

# சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை சேர்ந்தவர்களுக்கு கொரோனா?

(புதுடில்லி)

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியைச் சேர்ந்த இருவருக்கு கொரோனா தொற்று உறுதிச் செய்யப்பட்டதாக தகவல் வெளியான நிலையில், சென்னை அணியைச் சேர்ந்தவர்களும் சிக்கியுள்ளனர்.

ஐபிஎல் 2021 சீசன் இந்தியாவில் உள்ள ஆறு நகரங்களில் நடக்கிறது.

முதற்கட்டமாக சென்னை, மும்பை வான்கடே மைதானங்களில் நடை பெற்றது. தற்போது அகமதாபாத், டெல்லி மைதானங்களில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியைச் சேர்ந்த இருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக தகவல் வெளியானது.

இதற்கிடையில் தற்போது சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உறுப்பினர்கள் சிலருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் டெல்லி அருண் ஜெட்லி மைதானத்தின் கிரவுண்ட்மேன்களும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் டெல்லியிலும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி அகமதாபாத்திலும் உள்ளன. (ம)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


மருத்துவ பீட பேராசிரியை நீலிகா மலவிகே தெரிவித்தார்.

கோவிட் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)


வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1678 திகதி 2021.05.03
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 18 28 89 94

தன நிதானய
திகதி - 2021.05.03
சீட்டிழுப்பு இலக்கம் - 507
B 10 42 49 56

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 03.05.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2765
H 02 03 06 52

மஹஜன சம்பத
திகதி 2021/05/03
சீட்டிழுப்பு இலக்கம் 4470
K 6 3 1 2 0 6

மெகா பவர்
திகதி 03/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0827
M 06 21 59 60 69

அத கோடிபதி
திகதி திங்கள்
சீட்டிழுப்பு இல. 1266
வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 03.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 132,703,123
வெற்றி இலக்கங்கள் 16 20 60 74 Q
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை திங்கள்
சீட்டிழுப்பு இல. 3596
வர்ணம் கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 03.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 38,625,788
வெற்றி இலக்கங்கள் 01 21 26 40 U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி : 03.05.2021
வெற்றி வாரம் : 3147
வர்ணம் : மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 12 14 23 44 மேடம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 13,949,429

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1440 நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 03/05/2021 தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் E 05 39 47 72
அடுத்த சுப்பர் ஜக்பொட் 54,613,249/=

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1754
சீட்டிழுப்பு திகதி 03.05.2021
வெற்றி இலக்கங்கள் 07 27 46 57 U
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 24,925,112
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

NLB
மஹஜன சம்பத MAHAJANA SAMPATHA
Y 500979
02.05.2021 4469
050044690659206
02.05.2021 ஞாயிறு
மஹஜனவில்
எமது விற்பனையில்
ரூபா 20,00,000 (இருபது லட்சம்)
வெல்லப்பட்டுள்ளது.
கடந்த வருடம் 15.09.2020 அன்று
இதே மஹஜன சீட்டிழுப்பில்
எமது விற்பனை நிலையத்தில்
அன்றைய தின சுப்பர் ஜக்பொட் பரிசான
3 கோடி 71 லட்சம்
வெல்லப்பட்டது யாவரும் அறிந்ததே.
AM சங்கானை
AM.த.சகீஜன்
NLB - N 220062 .DLB - 09.9114
பிரதான வீதி, சங்கானை
(C-2096)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி கொடிகாமத்தில் சந்தை கொத்தணி உருவாகும் அபாயம்

## சுகாதார பிரிவு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சி பிரதேசம் கொடிகாமம் சந்தை வியாபாரிகள் சிலருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் அவர்களுடன் தொடர்புபட்டு மேலும் பலர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டு வருவதால் "கொடிகாமம் சந்தை கொத்தணி" உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் உட்பட ஐவருக்கு நேற்றைய பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

கொடிகாமம் மரக்கறி சந்தை வர்த்தகர்களிடம் கடந்த மாதம் 28ஆம் திகதி எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் சந்தை மரக்கறி வியாபாரிகள் இருவர், மற்றும் சூழவுள்ள கடைகளின் வியாபாரிகள் இருவருமாக நால்வருக்கு தொற்று உறுதிப் படுத்தப்பட்ட நிலையில் சந்தை முடக்கப்பட்டு ஏனைய வர்த்தகர்களிடமும் 30ஆம் திகதி பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இவற்றின் முடிவுகள் நேற்று வெளியாகிய நிலையில் கொடிகாமம் சந்தை கொத்தணியில் ஐவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதில் சிங்கர் கம்பனி பணியாளர்கள் இருவருக்கும், பழக்கடை வியாபாரி ஒருவருக்கும் செருப்பு கடை வியாபாரி ஒருவருக்கும் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கும் தொற்று உறுதியாகியுள்ளது.

இது தவிர நேற்றைய தினமும் 154 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும் அவற்றின் முடிவுகள் கிடைக்கும் வரை முடக்கப்பட்டிருந்த கொடிகாமம் சந்தை மற்றும் வர்த்தக நிலையங்கள் தொடர்ந்தும் முடக்கத்தில் இருக்கும் எனவும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனா தொற்று உறுதியான சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கடந்த 30ஆம் திகதி சபை கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளமையும் தெரிய வந்துள்ளது.

கொடிகாமம் சந்தை தொகுதியில் கொரோனா தொற்று உறுதியானவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர்கள் பிரதேசத்திற்கான சுகாதார பரிசோதகர்களை தொடர்பு கொள்ளுமாறும் அல்லது 021 227 0014 என்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமணையின் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தம்மை தனிமைப்படுத்திக் கொள்ளுமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆகவே கொடிகாமம் சந்தை கொத்தணி மேலும் உருவாகாமல் தடுப்பதற்கு மக்கள் சுகாதார வழி காட்டுதல்களை சரியாகப் பேணி விழிப்புடன் இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் (ம)


**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம், உரும்பிராய், கோப்பாய் வீதியில் மெயின் றோட் முகப்புடன் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (6791)

077 623 4204
077 225 9798
076 300 1654

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (6790)

**கட்டடம் வாடகைக்குண்டு**

சாவகச்சேரி நகர்ப்பகுதி கண்டி வீதியில் வீட்டுக் கட்டடம் வாடகைக்குண்டு. அலுவலக தேவைக்கோ அல்லது களஞ்சிய பாவனைக்கோ பொருத்தமானதாக இருக்கும்.

தொடர்பு (C-2098)

077 940 0963



**துயர் பகிர்கின்றோம்**

எமது ஆசிரியர்களில் ஒருவரான திரு.நா.பத்மராஜ் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் **சின்னத்தம்பி நாகராஜா**

(புலோலி தெற்கு, புலோலி)

தோற்றம் 17.11.1955 மறைவு 03.05.2021

அவர்கள் நேற்று (03.05.2021) திங்கட்கிழமை இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள், நிர்வாகத்தினர்,
NORTHERN ZOOM CLASS (6788)

**TECHNO WORLD**
தொழில்நுட்பக் கல்லூரி
Clock Tower Road, Jaffna.

A/L 2022, 2021, 2021 A/L DAY CLASS
ZOOM CLASS

2021 A/L மற்றும் 2020 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது

A/L 2021 புதிய பிரிவு ஆரம்பம் 05.05.2021

முற்றுமுழுதாக தேசிய பாடசாலை A/L தொழிநுட்ப பிரிவு ஆசிரியர்களையும் மற்றும் Technical College விரிவுரையாளர்களையும் கொண்ட முன்னணிக் கல்வி நிறுவனம்.

- தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம் - ராகவன் (B.Sc) - முருகநிரோஜன் (B.Sc) - நிரோஜன் (B.Sc)
- பொறியியல் தொழிநுட்பவியல் - அருண்குமார் (HNDE) - சிவஜன் (விரிவுரையாளர்) - நிசாந்தன் (HNDE)
- உயிர் முறைமைகள் தொழிநுட்பவியல் - திருக்குமரன் (B.Sc in Agri.) - நிரோஜன் (B.Sc in Agri.)
- தகவல் தொடர்பாடல் தொழிநுட்பவியல் - உமாகாந்தன் (BIT) - நயன் (B.Sc)
- விவசாயம் - சாரங்கன் (B.Sc in Agri.) - திருக்குமரன் (B.Sc in Agri.)
- சித்திரம் - ஜெயந்தன் (B.A)
- புவியியல் - S.P கரன் (B.A)
- கணிதம் (7) - மோகன்ராஜ் (B.Sc)
- ஊடகக்கற்கை - கஜிதரன் (MA in Mass Communication)

(C-2100)

நேரடி வகுப்புகள் ஆரம்பித்த பின்னரும் ZOOM வகுப்புகள் இறுதிப் பரீட்சை வரை தொடர்ந்து நடைபெறும்.

077 017 5346

**தேவை**

பிரான்சில் இருந்து இயங்கும் வானொலி ஒன்றுக்கு பகுதி நேர நிகழ்ச்சி தயாரிப்பாளர், செய்தி வாசிப்பாளர் தேவை.

இணையத்தளம் மற்றும் YouTube கையாள தெரிந்தவர்களுக்கும், இளையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

கீழ் உள்ள வாட்ஸ் அப் இலக்கத்தில் உங்கள் விபரங்களை பதிவிடுங்கள்.

0033767528755 (6789)

**Physics Zoom Classes**
Electricity 150 MCQ கடந்தகால வினாக்கள் (12 வகுப்புக்களில்)
Mr. C.Thivyan B.SC,PGDE
(யாழ். தேசிய பாடசாலை ஆசிரியர்) (C-2701)
074 136 5446
கோலாசிற்றி
இல.234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**
பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-2099)
077 436 6704, 077 179 1963

**சிறுநீரகம் தேவை**
அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட 35 வயதுடைய ஆண் ஒருவருக்கு O+ / A+ வகையைச் சேர்ந்த சிறுநீரகம் உடனடியாகத் தேவை.
தொடர்பு (6783)
077 169 6329

**விரைவு பொதிகள் சேவை**
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-2059)
0768226240 DHL

**அண்ணா** EXPRESS Courier Service
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-2060)
070 3305500
077 888 9388
976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.